# திசை
THISAI



அறிவுப் பசிக்கு அரிய விருந்து !

'நான்' உளவியல் மஞ்சரி வெளியீடுகள் படித்துப்பாருங்கள்

இவ் ஆண்டு [புதிய] வெளியீடுகள்
T. M. அன்ரனிப்பிள்ளை LL.B. எழுதிய
"EASY ENGLISH"
( இலகுவான ஆங்கிலம் ) பகுதி III
வி. பியின் " 80 முதல் 88 வரை "
கலாநிதி சோ. கிருஷ்ணராஜாவின்
" விமர்சனத்தின் மெய்யியல் "
A-012



திசை 1 | 15-4-1989 சனிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 14


# ஈழத் தமிழ் பேசும் மக்களின் புத்தாண்டுப் பலன் எப்படி?

**தமிழ்ப் புதுவருடப் பிறப்பின் காலநிர்ணயம் பற்றி தமிழ்ப் பஞ்சாங்க சோதிடர்கள் குழம்பிக் கொண்டிருப்பதுபோலவே, தமிழ்மக்களின எதிர்காலமும்—புதுவருடப் பிறப்பின் பின்னரும் குழப்ப நிலையைக் கொண்டிருக்கப் போகிறதா? தமிழ்ஈழ மக்களுக்கு மனச்சாந்தியையும் சந்தோஷத்தையும் விடுதலையையும் தரும் காலம் விரைவில் ஏற்படாதா? இதுவே இன்றைய தமிழ்ப் பகுதி அரசியல் ஆரூடர்களின் முக்கிய கேள்வியாகும்.**

இவர்களின் அரசியல் ஆருடங்கள் என்ன சொல்லுகின்றன?

1. நாடு தழுவிய இடைக்கால யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசாங்கம் ஏப்ரில் மாதம் 12ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரை அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளது. இதற்கு இசைவாகவே இந்திய அமைதிப்படையும் வடக்கிலும் கிழக்கிலும் நடந்துகொள்ளும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தும் இதுவரை அமைதிப்படை அத்தகைய தனது உடன்பாட்டை தெரிவித்ததாக இல்லை. தமிழ் பஞ்சாங்கங்கள் போலவே நமது அரசாங்கத்தின் யுத்த நிறுத்த நடவடிக்கைகளும் இரு வேறுபட்ட நிலைகளில் நிற்பது எதைச் சுட்டுகிறது? தமிழ் மக்களுக்கு விமோசனம் இன்னும் அண்மையில் இல்லை என்பதையா?

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் கதியென்ன?

வட, கிழக்குப் பகுதிகளிலிருந்து தமிழ் இளைஞர்கள் மத்திய கிழக்கிற்கும், வெளி நாடுகளுக்கும் செல்வது நன்கு அறியப்பட்டதே,

இந்த "ஓட்டையை" அடைப்பதற்கோ என்னவோ இன்று இலங்கை அரசு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவு ஒன்றினை (F. E. B.) நிறுவியுள்ளது.

முன்னர் வந்த பத்திரிகைச் செய்திகளின்படி இந்த F.E.B யின் அனுமதியின்றி இலங்கையிலிருந்து எவருமே வேலை வாய்ப்பு பெற்று வெளிநாடு

(12ஆம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டு வாழ்த்து!

*தொல்லையும் துன்பமும்*
*மரணமும் சுமந்த*
*பழைய ஆண்டு.*
*போயிற்று போயிற்று!!*
*இன்பமும் இனிமையும்*
*எல்லையாய் அமைய*
*எழுந்ததே புதிய*
*புத்தாண்டு எவர்க்கும்!*




## இசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே"*

### நீதியின் கருணை

*ராஜீவ் காந்திக்கு துவக்கினால் அடித்ததற்காக தற்போது சிறைவாசம் அனுபவித்துவரும். விஜய முனி விஜித ரோகண என்னும் ராணுவ வீரனுக்கு கருணை காட்டவேண்டும் என்று சுதந்திரக் கட்சி அங்கத்தவர் ஸ்ரான்லி திலகரத்ன நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.*

*உடனே செவிசாய்த்த நீதி அமைச்சர் வின்சென்ற் பெரேரா, இதுபற்றி ஜனாதிபதிக்கு தான் சிபார்சு செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார்.*

*கருணை காட்டும்படி சிபார்சு செய்யப்படும இந்த விஜயமுனி யார்? அவன் ஒரு கடற்படைவீரன். அவன் செய்த குற்றமோ பாரதூரமானது மட்டுமல்ல, பலர் அறியச் செய்யப்பட்டதுமாகும். மேலும் அவனது பின்னணியோ, ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும், அதனால் மக்கள் பாதுகாப்பையும் கோரிநிற்கும் ராணுவப் பின்னணி. இருந்தும் அவன் அவற்றைப் பொருட்படுத்தாது, ஒரு பயங்கரவாதியே செய்யத் துணியாத செயலைச் செய்தமைக்காக இன்று சிறைவாசம் அனுபவிக்கிறான்.*

*அத்தகைய ஒருவனுக்கு இரக்கம் காட்டும்படி எதிர்க்கட்சி கேட்கிறது. அதைத் தலைமேற்கொண்டு சிபார்சு செய்கிறது. "கருணைவடிவெடுத்த" நமது அரச நீதி.*

*கருணை, குற்றவாளிகளுக்குக் காட்டப்படுவது நன்று.*

*அது அவர்கள் திருந்துவதற்கு வழிவகுக்கும்; நாம் வரவேற்கிறோம்.*

*ஆனால் இத்தகைய குற்றவாளிகளுக்கெல்லாம் கருணை காட்டக்கூடிய தாராண்மை மிக்கது நமது நீதியென்றால், எதுவித குற்றமும் செய்யாமல், எந்தவித பாவமும் அறியாது எந்தவித ஆதாரமும் இன்றி பூசாவிலும், வெலிக்கடையிலும் ராணுவ முகாம்களிலும் அடைபட்டுக் கிடக்கும் நமது ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்களையும் நோக்கியல்லவா இந்த நீதியின் கருணை பெருக்கெடுத்திருக்க வேண்டும்?*

*ஆனால் நமது நீதி அப்படிச் செய்யாது. காரணம் நீதியும் நியாயமும், சட்டமும் ஒழுங்கும் ஆட்சியின் குணங்களின் பிரதிபலிப்பே.*

*இராவணன் ஆளும்போது சீதையை விடுவிக்கும்படி கேட்க முடியுமா?*

*கும்பகர்ணர்களே விழித்தெழுவர்!*


'சற்றடே றிவியூ' வின் சகோதர வாரப் பத்திரிகை

**திசை**
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

**சந்தா விபரங்கள்:**
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

**இலங்கை**
ஒரு வருடம்–ரூபா: 200/–
அரைவருடம்–ரூபா: 100/

**இந்தியா**
ஒரு வருடம்–ரூபா: 300/–
(இந்திய ரூபா)

**சிங்கப்பூர் / மலேசியா**
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

**ஏனைய நாடுகள்**
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# படிக்கற்களை, 'திசை' செதுக்கத் தொடங்கியுள்ளது



## இணைதல்

நமது பிரதேசத்தில் தரமிக்க தமிழ் வாரப் பத்திரிகையொன்று வெளிவரவேண்டும் என்று கருதப்பட்டது இன்று செயலாகியுள்ளது. 'திசை'யை ஆரம்பம் முதல் ஒழுங்காக நோக்கிவந்தேன். 'தரம் பேணப்படுகிறது.' நன்றிகளும், இத்தரம் இறங்கிப் போகக் கூடாது என்பதின் வலியுறுத்தலும் தங்களுக்காக.

நேர்த்தியான படைப்புக்கள். துணிச்சலான செய்திகளும் கருத்துக்களும், (குறிப்பாக அரசியல் கட்டுரைகள்). நிச்சயமான வரலாற்றைத் 'திசை' பெற்றுக் கொள்ளும். படிக்கற்களைத் திசை செதுக்கத் தொடங்கியுள்ளது — தன்னை நிதானப்படுத்தி.

எஸ். கருணாகரன்
இயக்கச்சி.

விளம்பரங்கள், நினைவஞ்சலிகள், அங்கே கொலை இங்கே கொலை — இவைகளுக்கு மத்தியில் 'தாரகை நடுவண் தண் மதி போல' திசையின் வரவு எம்மை அறிவுச் சுரங்கத்துக்கு அழைத்துச் செல்கிறது. உலக விளையாட்டுச் செய்திகள், மற்றும் பல்துறையைச் சேர்ந்த உலகப் பிரசித்தமானவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் திசையின் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

ரி. எம். சிவகடாட்சம்
மயிலிட்டி.

கடந்த 18–2–89இல் வெளியாகிய 'ஜே. வி. பி. சில குறிப்புகள்' என்ற தலைப்பில் வெளியான மதிப்பாய்வினை வாசித்தேன். இவை போன்ற மதிப்பீட்டு ஆய்வுகள் நம்மவரின் அரசியல் கண்ணோட்டத்தினை மேம்படுத்துவதுடன், திசையை வலுப்படுத்தும் என்பது எனது கருத்து.

ப. பிரேமகாந்தன்
வட்டுக்கோட்டை.

சில மஞ்சள் பத்திரிகைகளை வேறு வழியில்லாமல் வாசிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட எமக்கு, 'திசை' ஒரு விடிவெள்ளியாக அமைந்துள்ளது. இப்படி ஒரு பத்திரிகை மற்றும் தமிழ் கூறும் நல்லுலகில் வெளிவருவது சந்தேகமே. இன்னும் மணம் வீச கீழ்க் காணுபவற்றைச் சேர்க்க வேண்டுகின்றேன் ... .....

மூ. சி. சீனித்தம்பி
வதிரி அபிவிருத்தி நிறுவனம்
வதிரி.

14–1–89 இல் வெளியாகிய முதல் இதழில் மலையாளத் திரைப்பட இயக்குநர் ஜோண் ஏபிரஹாம் பற்றியும், அவரது படங்கள் பற்றியும், சினிமாப் பகுதிச் செய்திகளாக வந்தன. 4–3–89 இல் வெளியான இதழின் 'இணைதல்' பகுதியில் அளவெட்டியைச் சேர்ந்த 'செ. த.' என்பவர், தயவு செய்து திசையில் சினிமாச் செய்தியைக் கலக்காதீர்கள் எனக் கேட்டிருந்தார். செ. த. வும் அவர் போன்று, திசையில் சினிமாச் செய்தி வெளிவருவதை விரும்பாதவர்கள், நிச்சயமாக கற்பனாவாதக் கண்ணோட்டமுள்ள, கருத்து முதல் வாதிகளாக இருப்பார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

திசையில் வெளிவரும் சினிமாச் செய்தி, கற்பனாவாதிகளின் வியாபாரச் சினிமா பற்றிய செய்திகளல்ல. சினிமா என்னும் கலை, இன்று உலகில் ஓர் முக்கியமான சாதனம். இதன் உதவியினால் சமூக மாற்றத்துக்குரிய யதார்த்தத்தை மாற்றுவதற்கும், துவக்குவதற்கும், மக்களுக்கு நிச்சயம் உதவி புரியும் என்பதை — கடந்த இதழில் புத்ததாடெப் தாஸ் குப்தா கூறியுள்ளதை நினைவுகூர வேண்டும்.

செல்வி. கார்த்திகா பாலா
கரவெட்டி.

நிதானமான, புதிய சரியான நோக்கிலான அரசியல் விமர்சனக் கட்டுரைகள் வாசகர்களை உள் விடயங்களுக்கு இட்டுச் செல்கின்றன. நாடு எங்கே நிற்கின்றது, மக்கள் நிலை என்ன, அரசியல் நோக்கு எப்படி என்பன போன்றவைகளை திசையின் கட்டுரைகள், முகப்புச் செய்திகள், ஆசிரியத் தலையங்கம் என்பன அழகுறப் படம் பிடித்துக் காட்டுகின்றன. வெறும் நிகழ்வுச் செய்திகளைத் தரும் வாராந்த செய்திப்பத்திரிகையாக அமையாமல் காலத்தின் தேவையுணர்ந்து நல்லதொரு தமிழ் வெளியீடாக 'திசை' அமைந்துள்ளது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

'ஜே. வி. பி. சில குறிப்புகள்' கட்டுரை, அரசியல் விமர்சகர்களோ அல்லது கொழும்பு பத்திரிகைகளின் பத்தி எழுத்தாளர்களோ இதுவரை பார்க்காத புதிய கோணத்திலும், தர்க்கரீதியாகவும் அமைந்து பல விடயங்களை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இன்னும்—தூவானம், கலைச்சாரல் என்ற பகுதிகள் மூலம் தரமான தாக்கமான விடயங்களை வெளியிடுவது குறித்து நன்றி தெரிவிக்கவேண்டியுள்ளது. ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் தரமான வாசகர்கள்— இரசிகர்களாகப் பண்படச் செய்வதற்கும், ஆர்வங்களை மேலும் விடயங்களைத் தேடித் துருவிப் படிக்கத் தூண்டுவனவாகவும் இப்பகுதிகளில் வெளியாகும் விடயங்கள் அமைந்துள்ளன. தொடர்க நும் பணி!

மா. நாகேஸ்வரன்
இறம்பைக்குளம்,
வவுனியா.

# பத்து லட்சம் மலையக மக்களுக்கு

## தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதித்துவம் இன்மை

**1989 பொதுத் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். நடேசன் விடுத்துள்ள அறிக்கை:**

கடந்த பொதுத் தேர்தல், 10 லட்சத்துக்கு அதிகமான இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமலேயே முடிவுற்றது. சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் கூட ஸ்ரீலங்கா முஸ்லிம் கொங்கிரஸ் ஸின் மூலமாக 4 தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதித்துவத்தை வென்றெடுத்துள்ளனர். இந்த அவல நிலைக்கு இலங்கை தொழிலாளர் கொங்கிரசும் அதன் சந்தர்ப்பவாத கொள்கையுமே காரணமாகும்.

1947 பொதுத் தேர்தலில் இலங்கை இந்திய கொங்கிரஸ் 7 நாடாளுமன்ற ஆசனங்களை கைப்பற்றியது. அதன் பின் 1948 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டம் மலையக தமிழ் மக்களின் குடியுரிமையையும், வாக்குரிமையையும் அபகரித்தது. 1967ஆம் ஆண்டு இந்திய—இலங்கை ஒப்பந்த (அமுலாக்கல் சட்டம்) மூலம் பல ஆயிரக் கணக்கான மலையக தமிழ் மக்கள் குடியுரிமை பெற்று வாக்களிக்கும் உரிமையையும் பெற்றுர்கள். எனினும் 30 ஆண்டு காலமாக மலையகத் தமிழ் மக்கள் சார்பாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதித்துவம் இல்லாது தவித்தனர்.

இ. தொ. கொ.வின் தலைவர் திரு. எஸ். தொண்டமான் 1977ஆம் ஆண்டில்தான் நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியின் 3ஆவது அங்கத்தவராக நாடாளு மன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சி அரசுடன் இணைந்து ஓர் அமைச்சரானுர். முன்னுள் ஜனுதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசு நாடற்றவர்கள் பிரச்சினையை தீர்க்கும் என வாக்குறுதி அளித்த போதிலும் 5 லட்சம் மக்கள் தொடர்ந்தும் நாடற்றவர்களாகவே இருந்தனர். எனவே 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இ.தொ. கொ. பிரார்த்தனை நடாத்திய அதே வேளை தோட்டத் தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டியைச் சார்ந்த 13 தொழிற் சங்கங்கள் நாடற்ற நிலையில் உள்ள மக்களுக்கு குடியுரிமை வழங்கக்கோரி வேலை நிறுத்தத்தை மேற்கொண்டன. இதன் விளைவாக 1986ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டத்தினை அரசு நிறைவேற்றியது. ஆக மொத்தம் 469,000 நாடற்ற மக்களுக்கு 18 மாதங்களில் குடியுரிமை வழங்கி நாடற்ருேர் பிரச்சினைக்கு முடிவு காணப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனுல், அரசு இச் சட்டத்தை நடைமுறைப் படுத்த தவறிவிட்டது. 1988 நொவம்பர் மாதம் வரை இச்சட்டத்தின் கீழ் 39,276 பேருக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவு சுமார் 5 லட்சம் மக்கள் தொடர்ந்தும் நாடற்ற நிலைமையில் வைக்கப்பட்டுள்ளார்கள். பொய் வாக்குறுதியை அளிப்பவர் என்று அம்பலப் படுத்தப்பட்ட நிலையில் ஜனுதிபதி தேர்தலில் யு.என்.பி. கட்சி வேட்பாளரை ஆதரிக்கும் தொண்டமானின் கோரிக்கைக்கு மலையகத் தமிழ் மக்கள் செவிசாய்க்க மாட்டார்கள் என்ற நிலையில் அரசு இன்னும் ஒரு சட்டத்தை அதாவது நாடற்ருேருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை அவசர அவசரமாக 1988 நொவம்பர் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இச் சட்டத்தின் பிரகாரம் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்தவர்கள் இயல்பாகவே இலங்கை பிரஜைகளாவார்களென பிரகடனம் செய்யப்பட்டது.

ஜனுதிபதி தேர்தல் பிரச்சாரத்தின்போது 10 லட்சம் மலையகத் தமிழ் மக்களின் ஆதரவு யு.என்.பியின் ஜனுதிபதி வேட்பாளருக்கே வழங்படும் என, தொண்டமான் பிரகடனம் செய்தார். எனினும் இம்மக்களின் பெரும்பாலனேர்கள் வாக்குரிமை அற்றவர்கள் என்ற உண்மையை நன்ருகப் புரிந்துகொண்டிருந்த சுதந்திரக் கட்சியின் ஜனுதிபதி தேர்தல் வேட்பாளர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா, தொண்டமானின் கூற்று ஏமாற்று வித்தையென அம்பலப்படுத்தினுர். பெரும்பாலான மலையக மக்கள் குடியுரிமை பெற்றிருந்தாலும் அவர்கள் வாக்காளராகப் பதிவு செய்யப்படவில்லை. 10 ஆண்டுகள் யு.என்.பி அரசின் அமைச்சராக இருந்தும்கூட, இவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்விக்கக்கூட தொண்டமானுல் முடியவில்லை. இருந்தாலும் 4 தசாப்தங்களுக்குப் பின் 1989 பெப்ரவரி பொதுத் தேர்தலில் தங்களது பிரதிநி

(11ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா, ஜேர்மனி,
பிரான்ஸ், கனடா, லண்டன்,
போன்ற நாடுகளுக்கு
செல்ல விரும்புகின்றவர்கள்
எம்மைத்
தொடர்பு கொள்ளவும்.
* தாய்வான்
செல்ல விரும்புகிறவர்களும்
எம்மைத்
தொடர்பு கொள்ளவும்.
சம்பளம்: 200 டொலர்
3 வருட ஒப்பந்தம்
* பாஹ்ரேன், குவைத், சவூதி
போன்ற நாடுகளுக்கும்
பயணங்கள்
மேற்கொள்ளப்படும்.
இவை எல்லாவற்றிற்கும்
நாடவேண்டியது
**V. T. R. TRAVELS**
41, 3rd Cross Street,
JAFFNA
A—10

# அருகிவரும் கிராமியப் பண்புகள்

ச. இரத்தினசேகரன்

உலகச் செய்திகளைக் கேட்பதிலும், படிப்பதிலும் ஆர்வம் உள்ள நாம், எமது கிராமப்புற வரலாறுகளைத் தெரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு வரலாறுண்டு. அந்த வரலாற்று நாயகர்கள் அடிப்படைக்கல்வியறிவு இல்லாதோர், பொருளாதாரத்தில் மிக மிகப் பின்தங்கியோர். இக்கிராமங்களை உருவாக்க இச்சாமானிய மனிதர்கள்பட்ட துன்பங்கள் பல. கிராமங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். வளர்ந்த கிராமமென்றும் வளர்ந்து கொண்டிருக்கும் கிராமமென்றும், இனி வளர்க்கப்பட வேண்டிய கிராமமென்றும் பிரித்துக் காட்ட முடியும். முன் கூறிய இரு கிராமங்களையும் சீர் அமைத்து, செம்மையாக, ஒரு கட்டுக்கோப்போடு அமைத்த பெருமை அந்தச்சாமானியர்களுக்கே சேரும். தமது வாழ்வை வென்றெடுக்க இவர்கள் பின்பற்றிய பாதை காட்டுவாழ்க்கையாகும். உறவு முறைகளோடு சங்கிலிப் பின்னல்கள் போன்று கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்று சில கிராமங்களை நோக்குமிடத்து நோய் தீர்க்கும் அருமருந்தாக அதன் இயற்கையின் படைப்பு அமைந்திருக்கிறது.

தோழர் மாஓ - சே - துங் கூறினர்: " கிராமங்களிலிருந்துதான் புரட்சி நகரப்புறங்களை நோக்கிச் செல்ல முடியும்". " இந்தியாவின் இதயமே கிராமப்புறம் " என மகாத்மா காந்தி கூறினர். வெவ்வேறுபட்ட கொள்கை உடையவர்களாக இருவரும் இருந்தாலும் கிராமத்தைப் பொறுத்தமட்டில் அதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தே கூறினர்.

வட பகுதியில் உள்ள கிராமப்புறங்களில் எவளவோ தொழில்கள் வளர்ந்து கொண்டும், இறந்து கொண்டுமிருக்கின்றன. குலரீதியாக பல தொழில்கள் அமைந்தன. அந்தத் தொழில்களை வளர்த்தெடுக்க அந்தச் சாமானிய மனிதர்கள் பட்ட துன்பங்கள் ஏராளம். அவர்கள் குடிசைக் கைத் தொழில்களை மேற்கொண்டு தமது குடும்பப் பிரச்சினைகளையும் போக்கி, பொதுக்காரியங்களையும் செம்மையாகச் செய்தனர். அக்காலம் வங்கிவசதிகள் இருந்தும் அவற்றின் பலன்களை இவர்கள் பெறமுடியாதகாலம். இவர்களை யாரும் வழி நடத்தக் கூடியவர்கள் இல்லாத காலம். தமது முன்னோர்கள் விட்டுச் சென்ற தொழிலை அவர்களின் செய்முறைகளோடு இவர்கள் செய்தனர். தமது உற்பத்திப் பொருள்களை பின்னேரச் சந்தைகளுக்குக் கொண்டு சென்று விற்று, இரவு 6 மணி அல்லது 7 மணிக்கு உலை ஏற்றிச் சாப்பிட்டு வந்தார்கள். பிற்காலத்தில் இந்த நிலையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

கல்வியின் அவசியத்தை உணர்ந்த கிராமவாசிகள், நாலு அல்லது ஐந்து கிராமங்களை ஒன்றுகச் சேர்த்து, பட்டணக் கல்விமான்களின் உதவியோடு கிராமப்புற சிறுவர்களுக்குக் கல்விக் கண் தந்தார்கள். பல பாடசாலைகளைக் கட்டி எழுப்பினுர்கள். அவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள தமது ஊர்களின் மத்தியில் கோயில் கட்டுவித்தார்கள். ஆரம்ப காலத்தில் ஆடு, கோழி போன்றவற்றைப் பலியிட்டனர். பின்னர் அதைக் காட்டுமிராண்டித் தனமானது எனக் கருதி தனி வழிபாட்டை நடத்தினர். மனிதாபிமான வேர் ஊன்றத் தொடங்கியது. அன்று வாழ்ந்த இளைஞர்கள் ஒரு புறத்தில் வாசிகசாலைகளை அமைக்கப் பாடுபட்டனர். எந்தப் பொதுக் காரியத்திற்கும் இவர்கள், பொருள் உதவியையும், உடல் உழைப்பையும், தமது கிராமங்களின் வளர்ச்சிக்காகக் கொடுத்தனர். பொதுச் சபைகளில் இன்று இருப்பது போன்று யாப்பு விதிகள் இருந்ததில்லை. மரபுகளைத்தான் இவர்கள் பின்பற்றினுர்கள். இவர்கள் மனங்களில் தமது ஊர் என்ற மந்திரம் நன்ருகப் படிந்திருந்தது. இதற்குரிய காரணம், இவர்கள் கூட்டு வாழ்க்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்களாக இருந்தமை.

இவர்களது பண்பாடுகள்தான் இன்று இவர்களை வரலாற்று நாயகர்களாக்கியிருக்கின்றது. பேசித் தீர்க்கவேண்டிய விடயங்களை, மிக இனிமையாக பெரிய மனிதத் தன்மையோடு பேசுவார்கள், கோபம் வந்தாலும் தான் சார்ந்த ஊரின் பொது விடயம் பாதிப்புற்று விடுமென நினைத்து, அதைத் தனக்குள்ளே ஜீரணித்துக் கொள்ளும் தன்மை, தமது வேலை போன்று பொது விடயங்களில் பொறுப்போடு செயல்படும் முறை, நிகரற்றன. சில கிராமங்களில் சாதியின் பெயரால் நடந்த அநீதிகளுக்கு முகம் கொடுத்து வென்ருர்கள். ஐக்கியத்திற்குட்பட்ட ஒரு கிராமத்தை வெல்வது மிகக்கடினமான ஒன்று.

கணவன், மனைவிக்கு இடையில் உள்ள பிரச்சினைகளை அந்தக் கிராமப் பெரிய மனிதர்கள் தீர்த்தார்கள். விவாகரத்து என்ற பேச்சுக்கே இடம் கொடாது கணவன், மனைவியைச் சேர்த்து வைப்பர்- உறவினர் கோபதாபம் ஏற்பட்டால் திருமணம், குடிபுகுதல், போன்ற நல்ல காரியங்கள் நடைபெறும்போது உறவுகளை இணைத்து விடுவார்கள், காணித் தகராறு வரும்; இவற்றை இவர்கள் பேசித் தீர்க்க முடியுமாயின் தீர்க்க முயற்சி எடுப்பார்கள். எந்தக்காரியத்தையும் நீதிமன்றத்தின் படிக்கட்டுக்களுக்கு ஏற விடமாட்டார்கள். பெரியோரின் பேச்சுக்களை கனம் பண்ண நல்ல தலைமுறையும் வளர்ந்து கொண்டிருந்தது.

கிராமப் புறங்களில் சில வழக்கங்களைக் காணலாம். யாராவது ஒருவருக்குச் சுகயீனமென அறிந்தால் ஊரே திரண்டுவிடும். தம்மால் முடிந்த பொருட்களை உடல் நலமில்லாதவர் வீட்டிற்குக் கொண்டு சென்று கொடுப்பார்கள். சுகயீனமுற்றவர் தேறும்வரை வீட்டிற்கு மாறி மாறி யாரும் வந்து போவர். ஒருவர் காலமானுல், இறந்தவர் வீட்டுக் காரியங்களை அதாவது ஒழுங்குகள் அத்தனையையும் அயலவர், உறவினர் செய்வர். அத்தோடு ஒரு மாதத்திற்கு இறந்தவர் வீட்டை நோக்கி உறவினர் அயலவர் காலைச் சாப்பாடுகள் அல்லது மத்தியானச் சாப்பாடு என்றும், சிலர் அரிசி, தேயிலை, சீனி என பல பொருட்களோ கொண்டு வருவர், இவை பின்னர், பெறுபவர் திரும்பச் செய்ய வேண்டிய கடன்களாக இருந்தாலும், இதில் இரண்டு விடயங்கள் தெரிகின்றன. இவர்கள் வந்து போவதால், துன்பத்துக்குள்ளானேர் கொஞ்சம் கொஞ்சமாய் துன்பத்திலிருந்து விடுதலை பெற வழி கிடைக்கிறது. அடுத்து, துன்பத்தால் உணவேதும் தேடாது இருந்துவிடுவார்கள் என்பதால் உணவாகக் கொடுத்தனர்.



திருமணத்தைப் பொறுத்தமட்டில் ஒரு பெண்ணிற்கு, அதே ஊரைச் சேர்ந்த மாப்பிள்ளையைப் பேசினுல், அந்த மாப்பிள்ளைக்கு அதே கிராமத்தைச் சேர்ந்த வேறு பெண்ணைப் பேச மாட்டார்கள், கலியாணப் பேச்சில் குழப்பமேற்பட்டால் மட்டுப் பேசுவர். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் பணவரவுக் கொண்டாட்டங்கள் நடைபெறும். தாழ்த்தப்பட்ட மக்களின் சிறு சேமிப்பு முறையை பணவரவு மூலம் பெற்றனர். இவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள். இவர்கள் பணவரவு மூலமாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர். அவர்களது ஊரவர்கள், அயலவர்கள் இவர்களது தேவைகளை உணர்ந்து தம்மால் முடிந்த உதவிகளைச் செய்தனர். கிராமப் புறங்களில்தான் கலைகள் பிறந்து வளர்ந்தன.

கிராமப் புறங்களில் சில இடங்களில் இன்னும் சில மூடப் பழக்க வழக்கங்கள் இருக்கலாம், இவை காலப் போக்கில் மறைந்து போகும் வாய்ப்புகளுண்டு. கிராமப்புற மக்களின் பண்பட்ட குணங்கள், பழக்கங்கள், பற்றி நிறைய எழுத முடியும், அவர்களது பழக்கங்களில் நல்ல உள் நோக்கங்கள் தென்படும்.

ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட காலத்திலும் சரி, உரிமைகள் கிடைத்த காலத்திலும் சரி, இவர்கள் தாம் சார்ந்த கிராமப் புறங்களை உருவாக்க எதிர் நீச்சல்போட்டவர்கள். அப் பெரியவர்கள் எழுதிவைக்காத பண்பாடுகளை இன்றைய இளைய தலைமுறை, அவர்கள் தந்த அறிவுச்சுடரைக் கொண்டு, அந்த நாளில் வாழ்ந்த சாதனை மானிடர்களைப் பற்றி ஆராயவேண்டிய கட்டாயத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

ஐக்கியத்திற்குட்பட்ட கிராமமே அபிவிருத்தியில் வெற்றியைக் காண முடியும். □

---

## 2000 - ரூபா பரிசுச் சிறுகதைப் போட்டி

சிறுகதை இலக்கியத்துறைக்கு வளமூட்டும் நோக்கோடும், சகல எழுத்தாளர்களையும் — இளம் தலைமுறையினர், எழுதாமல் இருக்கும் பழந்தலைமுறையினர் — ஆகிய சகலரையும் ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுகதைப் போட்டியொன்றை நடாத்தத் திசை தீர்மானித்துள்ளது.

### பரிசு விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | : | 750/= ரூபா |
| இரண்டாம் பரிசு | : | 500/= ரூபா |
| மூன்ரும் பரிசு | : | 250/= ரூபா |
| ஆறுதல் பரிசுகள் | : | ஒவ்வொன்றும் 100/= ரூபா வீதம் ஐந்து பரிசுகள் |

### நிபந்தனைகள்

1) சிறுகதைகள் அனைத்தும் எழுதுவோரின் சொந்தப் படைப்புகளாக இருக்கவேண்டும்.
2) இதற்கு முன்னர் வேறு எங்காயினும் வெளியிடப்படாதவையாக இருக்கவேண்டும்.
3) எந்தப் பிரச்சினையையும் மையமாக வைத்து எழுதப்படலாம்.
4) ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம். ஆனல், கதைகள் ஒவ்வொன்றும் முழுத்தாளில் (பூல்ஸ் கப் தாள்) பத்துப் பக்கங்களிற்கு மேற்படாமல், தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
5) எழுத்தாளரின் பெயர், புனைபெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
6) போட்டி முடிவு திகதி 3-5-1989
7) சிறுகதைப் போட்டி, ஆசிரியர் 'திசை', 267 பிரதான வீதி, யாழ்ப்பாணம். என முகவரியிடப்பட்டு, கதைகள் அனுப்பப்படவேண்டும்.
8) திசை ஆசிரியருடன் மேலும் இருவர் கொண்ட நடுவர் குழுவின் முடிவே, இறுதியானது.
9) பரிசுக் கதைகளும், தரமான ஏனைய கதைகளும் திசை யில் தொடர்ந்து வெளியிடப்படும். □

---

● அன்பர்களே உழைத்துப் பிழைக்க வேண்டும் என்பதற்காகவே இயற்கை நமக்கு இந்த உடல் உறுப்புகளை அளித்திருக்கிறது. இயற்கையின் எல்லையில்லாக் கருணை அருள் இது. எனது முதுகெலும்பை செல்வம் செல்வாக்கு இரண்டும்கூடி அசுரநடை போட்டு முன்னேற ஒருகாலும் படிக்கட்டுகளாக விடமாட்டேன்.

— மகாகவி வள்ளத்தோல்

● வேலை செய்யாதவன் மட்டும் சோம்பேறி அல்ல. தன் கடமையைப் புறக்கணித்துவிட்டு மற்ற வேலைகளைச் செய்பவனும் சோம்பேறியே.

— சோக்ரடீஸ்

● மின்மினிப் பூச்சி உட்காரும்போது மின்னுவதில்லை; மனிதன் சோம்பேறி ஆகும்போது அவனது புத்தி என்ற தீபம் அணைகிறது.

— எல். ஈ. சந்தன்

● செல்வம் சேர்க்க உழைப்பது அவசியம். அதற்காக இல்லை என்ருலும் ஆரோக்கியத்தை முன்னிட்டாவது உழையுங்கள்.

— பேன்




## மங்கையர் சாதனை:

# ஜிப்ரோல்ரர் நீரிணையை நீந்திய முதல் பெண்

கடல் நீச்சல்காரருக்குச் சவாலாக விளங்குவது இருபத்திரண்டு மைல் நீளமான ஜிப்ரோல்ரர் நீரிணை. என்றுமே கொந்தளிப்புக் குறையாத இக்கடல் ஆபத்தானது என்று பெயர் பெற்றது. பெரும் கற்பாறைகள் மட்டும் இங்கே பல்லாயிரம் ஆண்டுகளாக அசையாமல் நிற்கின்றன. இதில் நீந்துவது எவ்வளவு சிரமமானது என்பது, மீனவருக்கு மட்டுமே தெரியும். அவர்களின் எச்சரிக்கையையும் செவிமடுக்காது ஆர்த்தி பிரதான் (Aarti pradhan) ஜிப்ரோல்ரர் நீரிணையை நீந்திமுடிக்க முன்வந்தாள்.

அவளுடைய அனுபவங்கள் திகைப்பூட்டுவன. அவற்றை அவள் வாயிலாகவே கேட்போம்:

“1988 ஒகஸ்ற் 15 இலிருந்து தினமும் நான் கடற்கரைக்குப் போய் வந்தேன். கடல் கொந்தளிப்பு தணிந்த வேளைகளில் பயிற்சி பெற்றேன். கடல் அமைதியாக இல்லாத நேரங்களில், கரையில் நின்று பயங்கரப் புயல் அடிக்கும் கடலை நோக்குவேன். பேரலைகள் பனிக்குன்றுபோல் மேலேழுந்து மீண்டும் விழுந்து நொருங்கும். அந்நாட்களில் நீரில் கால் வைக்கவே பயமாகவிருக்கும்.

ஒகஸ்ற் 27 ஒரு சுபநாள்.

கடல் தெய்வத்திற்கு தேங்காய் உடைத்து வணங்கினேன். என் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது போல் கடல் அமைதியாக இருந்தது. ஆனால் நீரோட்ட வேகம் தணியவில்லை.

நீந்துவோர் உடலில் பூசிக் கொள்ளும் கிறீஸ் கூட எனக்குக் கிடைக்கவில்லை. வஸ்லின் மட்டும் பெற முடிந்தது. அதை மேனியெல்லாம் பூசிக் கொண்டு 8.30 இற்கு நீரில் குதித்தேன். கடல் நீர் வெதுவெதுப்பாக இருந்தது. ஆரம்பம் மகிழ்ச்சி தருவதாகத் தோன்றியது. ஒரு மணித்தியாலம் வசதியாக நீந்தினேன். ஆனால், இருந்தாற்போல் நீர் குளிர்வதை உணர்ந்தேன். அடுத்த சில நிமிடங்களில் என் உடலிலிருந்து வஸ்லின் உலர்ந்து உதிரத்தொடங்கியது. என் எலும்புகள் எல்லாம் குளிரத் தொடங்கின.

என்னைத் தொடர்ந்து வந்த பாதுகாப்பு வள்ளத்தில் இருந்தவர்களிடம் வெந்நீர் தரும்படி கேட்டேன். அவர்கள் கொடுத்த வெந்நீர், வள்ளத்தின் அசாதாரண அசைவினால், கடலில் கொட்டிவிட்டது, என் கைகளையும் கால்களையும் விரைவாக அசைக்கத் தொடங்கினேன். சற்று வெப்பத்தை வரவழைக்க அதுவே ஒரே வழி.

இன்னல்கள் இத்தோடு போய்விடவில்லை. என் உடலை வெப்பமாக வைத்துக்கொள்ளப் போராடிய வேளையில், துணையாக வந்த வள்ளத்திலிருந்த பொலிசார், அப்பகுதியில் திமிங்கிலம் உலவுவதாக எச்சரித்தனர். என்னைக் காப்பாற்றிக்கொள்ள வலைகளை வீசினர். ஆனால் நான் அப்படி வலைகளை வீசவேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன்.

வலையினால் போர்த்திக்கொண்டு நீந்துவது சுதந்திரமான அசைவைக் கட்டுப்படுத்தும். நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. திமிங்கிலமும் காணப்படவில்லை. ஆனால் சிறிது நேரம் என்னுடன் சேர்ந்து சில டொல்பின் மீன்கள் விளையாடிக்கொண்டு வந்தன.

எஸ். பி. கே.

ஒரு மணிநேரம் நீந்திய பின் ஜிப்ரோல்ரர் பாறை தெரிந்தது; நம்பிக்கை பிறந்தது. வேகம் அதிகரித்தது. ஆனால் மற்றொரு மணி நேரத்தின் பின்னர் என் வேகம் தடைப்பட்டது. ஒரு மணி நேரத்துக்கு முன்னர் கற்பாறை எங்கு தெரிந்ததோ அது இப்போதும் அங்கேயே இருப்பதாக உணர்ந்தேன். அப்போதுதான் நான் ஒரே இடத்தில் வட்டமிட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

ஆங்கிலக் கால்வாயுடன் ஒப்பிடும்போது ஜிப்ரோல்ரர் நீரிணை திட்டமிடக்கூடிய ஒன்றல்ல. கற்பாறையை அண்மியபோது நீர்ச்சுழி ஒன்று என்னைக் கௌவிக்கொண்டது.

மத்தியதரைக் கடலும் அத்திலாந்திக்கும் சங்கமிக்கும் இடம் அதுவாகையால் நீர் ஓட்டம் ஒரு குறிப்பிட்ட திசையில் செல்வதில்லை. ஒரே வட்டத்தில் நான் அகப்பட்டு நீந்திக்கொண்டிருந்ததன் காரணம் அதுவே.

இந்நிலையில் நான் களைத்துவிட்டதாக நினைத்து, துணைக்கு வந்தவர்கள் என்னை வள்ளத்தில் ஏறும்படி கேட்டனர்.

என்கனவு அர்த்தமற்றதாய் விடும்.

நான் அதே இடத்தில் மிதந்தேன்; சுழியோட்டம் வேகம் குறையும்வரை.

இறுதியாக, பயங்கர முடிவு எனத்தோன்றிய முயற்சியிலிருந்து விடுதலை பெற்றேன். ஒரு மணி நேரத்தில் நீந்திமுடிக்கவேண்டிய தூரத்தை கடக்க எனக்கு நான்கு மணித்தியாலம் பிடித்தன.

மறுகரையை அடைந்த போது மாலை 4.30 ஆயிற்று. அதனை நீந்தி முடிக்க இவ்வளவு நேரம் பிடித்ததே! என் துரதிஸ்டத்தையே குறை சொல்ல வேண்டும். வேறெவரையும் பழிசொல்வதற்கில்லை. கரையைக் கண்டபோதும் என் கைகளும் பாதங்களும் குளிர்ந்து விறைத்துப் போயின

தொல்லைகள் வரும்போது தொடர்ந்து வரும் என்பார்கள்.

என் எதிரே, சிறிது தொலைவில் நான்கு கப்பல்கள் போய்க்கொண்டிருந்தன. அவற்றால் எழுப்பப்பட்ட பெரும் அலைகள் என் முயற்சிகளைப் பலவீனப்படுத்தின. ஒவ்வொரு அலையும் என்னை 20-25 அடி தூரம் பின்னால் தள்ளின.

காலநிலை நன்றாக இருந்திருப்பின் அத்தூரத்தைக் கடக்க நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் தேவைப்பட்டிராது.”

உதவி: இந்தியா டைஜெஸ்ற்—ஜனவரி, 89 □

# காலந்தோறும் ஒடுக்குமுறையாளருக்கு முண்டு கொடுத்த தமிழ்த் தலைமைகள்

காலத்துக்குக் காலம் சிங்களத் தலைவர்களுக்கு முண்டு கொடுத்து காப்பாற்றி தமிழ் பேசும் இனத்தின் மீதான ஒடுக்குமுறைக்குத் துணைபோவதில் நமது தமிழ்த் தலைமைகள் நிகரற்றவை. வரலாற்றிலிருந்து இதற்கான ஒழுங்கு குலையாத உதாரணங்கள் பல உள. அவற்றில், சிலவற்றை நோக்குவோம்.

1930 களில் சிங்கள மக்களுக்கு தலைமை தாங்கியவர் பரன் ஜயதிலகா. 1936 ஆம் ஆண்டு அரசாங்க சபைக்கான பொதுத்தேர்தல் முடிந்ததும் நிர்வாகக்குழு ஆட்சிமுறையின் கீழான மந்திரிசபை உருவாக்கப்பட்டது. அதில் தனிச்சிங்கள மந்திரிசபையை எவ்வாறு உருவாக்கலாம் என்பதற்கான ஆலோசனையை பரன் ஜயதிலகாவுக்கு வழங்கியவர் இங்கிலாந்தின் மகாராணியாருக்கு கணித அறிவு வழங்கியவராக தமிழர்கள் பெருமைப்பட்ட கணித மூளை சி. சுந்தரலிங்கம் என்பவரேதான்.

அந்த ஆலோசனை எவ்வாறு அமைந்தது எனப் பார்ப்போம். 50 உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கசபை 7 உறுப்பினர்களுக்குக்குறையாத 7 குழுக்களாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு குழுவின் தலைவரும் மந்திரி ஆவர். எனவே எந்தவொரு குழுவிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்காதவாறும், சிங்களவர்களைப் பெரும்பான்மையோராகக் கொண்டதாக குழுக்களை அமைக்குமாறு சுந்தரலிங்கம் பரனுக்கு ஆலோசனை வழங்கினார். அப்போது தமிழர்களின் தலைவராகத் திகழ்ந்தவர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஆவார். முன்கூட்டிய யோசனையின்றி இந்தச் சட்டமேதை சபைக்குப் பிரசன்னமாக பரன் ஜயதிலகாவோ முன்கூட்டிய யோசனைகளுடன் சிங்களவரை பெரும்பான்மையானவர்களாய்க் கொண்டகுழுக்கள் அமையுமாறு பார்த்துக் கொண்டார்.

விடாக்கண்டன்

குழுக்களின் தலைவர்களின் தெரிவின் போதுதான் தனது மடைத்தனம் ஜி. ஜிக்குத் தெரிய வந்தது. இந்தத் துரோகச் சரித்திர நிகழ்வில் சுந்தரலிங்கம் எட்டப்பன் பாத்திரம் வகிக்க ஜி. ஜி. யின் சட்டமேதைமையோ முழி பிதுங்கியது. எப்படியோ இருபேரும் சேர்ந்து துரோகமே செய்தார்கள். ஒருவர் தன் 'அறிவால்', மற்றவர் தன் அறியாமையால்.

1947ஆம் ஆண்டுடீ.எஸ்.சின் தலைமையிலான சிங்கள ஆட்சிக்கு ஜி. ஜி. பொன்னம்பலம் முண்டு கொடுத்தார். இப்பொழுது அவரிடம் சுந்தரலிங்கத்தின் 'அறிவு' குடியேறியிருந்தது. ஜி. ஜியை தனது மந்திரிசபை சகாவாக வைத்துக் கொண்டே டி. எஸ். மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை, பிரஜா உரிமை ஆகியவற்றை பறித்தெடுத்தார். அத்தகைய துரோகத்தனத்தினால் டீ. எஸ் உயிரோடிருக்கும் வரை ஜி. ஜி. அவரின் மந்திரியாக இருந்து வந்தார்.

இறுதியாக இந்த உதாரணங்களின் வரிசையில் வாரிசாக வந்து நிற்கிறார் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம். 1982ம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலின் போது ஜே. ஆரைச் சந்தித்து விட்டு அவருக்கு நலன் பயக்கும் விதத்தில் தமது கட்சி முடிவை 'அமிர்' எடுத்தார். தமிழ் மக்களை, நோக்கி தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரியதன் மூலம் மொத்த வாக்கில் 50%க்கு மேற்பட்ட வாக்கை ஜே. ஆர். பெறுவதை சாத்தியமாக்கினார். இத் தேர்தலில் தமிழ் மக்கள் குறைந்த பட்சம் குமார் பொன்னம்பலத்துக்காக வாக்களிக்க வைத்திருந்தாலும் விழுந்த வாக்குகளின் எண்ணிக்கையில் 50 வீதத்தை ஜே.ஆர். பெற்றிருக்கமுடியாது, இத் தேர்தலில் ஜே. ஆருக்கு சாதகமாகவே அமிர்தலிங்கம் நடந்து கொண்டார் என்று தேசியவாதமும் வகுப்புவாதமும் என்ற தனது நூலில் பேராசிரியர் அரசரட்ணம் கூறியுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது, இப்படியாக காலத்துக்குக் காலம் தமது ஒடுக்குமுறையாளருக்கு முண்டு கொடுக்கும் தலைவர்களைத்தான் தமிழ் சமூகம் கொண்டுள்ளது என்பதை நினைத்தாலே வேதனை தருகிறது அல்லவா?

அரைமந்திரி பதவிகளுக்கு தங்கள் இனத்தின் உரிமைகளையும் அடகுவைக்கக் கூடியவர்கள் நமது கணித மூளைகளும், சட்ட மேதைகளும் என்பதை துல்லியமாக நாடி பிடித்து எலும்புத் துண்டுகளை வீசிய சிங்களத்தலைவர்களை இந்த வேதனைகளுக்கிடையிலும் வியக்காமல் இருக்கமுடியவில்லை. தமிழனின் உச்சியில் குடுமி கட்டிய ஜே. ஆர். வரை இது உண்மைதான். □

## பால் பொங்குதல்

பாலைச் சூடாக்கும்போது நீராவி வெளியேறுகின்றது. ஆடை திரண்டு மேலே வருகின்றது. ஆடை நீராவியை வெளியேறவிடாமல் தடுக்கின்றது. இதனால் பாலுக்குள் நீராவி அதிகரித்து பால் பொங்குகிறது.

நீரைத் தெளிக்கும்போது அல்லது அகப்பையினால் துளாவும்போது நீராவி செல்வதற்கு வழி உண்டாகும். இதனால் பால் பொங்குவது தணியும்.

## சக்கரீனும் நீரிழிவும்

சக்கரின் நிலக்கரித் தாரில் இருந்து கிடைக்கும் பொருட்களில் இருந்து செய்யப்படுகின்றது.

இது சர்க்கரையை விட பல மடங்கு இனிப்புடையது. இதில் காபோஹைதரேற்றோ வேறு உணவுகளோ இல்லை. எனவே வெல்லங்கள் உருவாக சாத்தியமில்லை. நீரிழிவு நோயாளிக்கு கொடுக்கப் பயன்படுகிறது.
இதனை கொன்ஸ்ரன்ரின் பால் பேர்க் என்ற ஜேர்மன் விஞ்ஞானி கண்டுபிடித்தார்.

— ரகுவரன்

# தரப்படுத்தல் திட்டங்களும்

## தமிழ் மாணவரின் உயர்கல்வி வாய்ப்புக்களும்

இலங்கையில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது தொட்டு மொழி மூலமான தரப்படுத்தல் அமுலுக்கு வரும் வரை பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான பீடங்களைப் பொறுத்தவரை தமிழ் மாணவர்கள் அதிக எண்ணிக்கையாவில் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கையின் மொத்த மக்களில் தமிழ்பேசும் மக்களின் வீதாசாரம் 25·/, ஆக இருந்த போதிலும் கூட பல்கலைக்கழக விஞ்ஞான பீடங்களுக்கான தெரிவில் தமிழ் பேசும் மாணவர்கள் 50·/. தெரிவு செய்யப்பட்டார்கள். இதனை தெளிவுபடுத்துவதற்கு 1969 — 1970 காலப்பகுதியில் மருத்துவ பொறியியல் பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விதாசாரத்தை அட்டவணை - 1 இல் காணலாம்.

1969 ஆம் ஆண்டு விஞ்ஞான பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் தொகை எண்ணிக்கை அடிப்படையில் அட்டவணை-2 இல் காணப்படுகிறது.

இத்தமிழ் பேசும் மாணவர்களிலும் மிகக்கூடிய வீதத்தினர் ஏறத்தாழ 75·/. திற்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்களாகவே காணப்பட்டனர். இதற்கான காரணங்களை ஆராய்வோம்.

தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களிலே யாழ்ப்பாணத்தில் மாத்திரம் கல்விக்கூடங்கள் பெருமளவுகாணப்படுகின்றன. காலனி ஆதிக்க காலத்தில் காலனி ஆட்சியினர் தமது ஆட்சியை பாதுகாக்கின்ற விசுவாசமான நிர்வாக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கு யாழ்ப்பாணத்தையே பெருமளவு நம்பியிருந்தனர். இதற்காகவும் தமது பிரித்தாளும் தந்திரத்திற்காகவும் பெருமளவு கிறிஸ்தவக்கல்விக்கூடங்களை யாழ்ப்பாணத்தில் நிறுவினர். இக்கல்விக்கூடங்களினால் யாழ்ப்பாணத்தவர் மதமாற்றம் செய்யப்படலாம் என அச்சம் கொண்ட இந்துப் பெரியவர்களான ஆறுமுக நாவலரும் பின்னர் வந்த இந்துபோட் இராஜரத்தினம் போன்றவர்களும் கிறிஸ்தவக் கல்லூரிகளுக்கு போட்டாபோட்டியாக இந்துக்கல்லூரிகளை நிறுவினர். ஒவ்வொரு கிறிஸ்தவக் கல்லூரிக்கு 1 மைல் இடைத்தூரத்தில் ஒவ்வோர் இந்துக்கல்லூரி நிறுவப்பட்டது. உதாரணத்திற்கு யாழ். மத்திய கல்லூரிக்காக யாழ். இந்துமகளிர் கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்காக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் உருவாக்கப்பட்டன.

இத்தகைமை படைத்த கல்விக்கூடங்களின் பெருக்கத்தினால் யாழ். குடாநாட்டில் கல்வி கற்றோரின் தொகை கூடுதலாகக் காணப்பட்டது. மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குரிய நிலப்பிரபுத்தவ குணும்சம் கல்வியால் கிடைக்கும் உத்தியோக சலுகைகளைக் கொண்டு தங்கள் அந்தஸ்துக்களை உயர்த்திக் கொள்ளுதலாகும். இத்தகைய தன்மையினால் யாழ்ப்பாண மத்தியவர்க்க சராசரிப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு செலவிடும் பணத்தினை ஒரு முதலீட்டுக்கான மூலதனமாகவே கருதுகின்றனர்கள். படிப்பிற்காக செலவிட்ட பணத்திற்கு மேலான பணத்தினை ஆண்பிள்ளைகளின் திருமணத்தின்போது சீதனம்மூலம் அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்கள். பெண்களைப் பொறுத்தவரையில், திருமண நிச்சயதார்த்தத்தில் பெண்களின் கல்வியும் ஓர் அம்சமாக உள்ளதால் அவசியம் கற்கவேண்டியவர்களாக உள்ளனர். அதேவேளை பெண்களிடம் இருக்கும் கல்வித் தகைமை அவர்களுக்கான சீதனத் தொகையைக் குறைத்துவிடும் தன்மையையும் கொண்டதாக உள்ளது.

**சிவ. ஜோதிலிங்கம்**

யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள வர்க்க நிலைமை சாதி அமைப்புடன் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். குடாநாட்டிற்குள் எந்தக்கூட்டம் சாதியில் தாழ்த்ததாக உள்ளதோ அதே கூட்டம்தான் வர்க்க நிலையில் உழைக்கும் வர்க்கமாக உள்ளது, எந்தக் கூட்டம் உழைக்கும் வர்க்கமாக உள்ளதோ அதே கூட்டம்தான் சாதியில் தாழ்ந்ததாகவும் உள்ளது. அதாவது ஒரு நாணயத்தின் சாதியும், வர்க்கமும் உள்ளன. இருக்கின்ற வர்க்க அமைப்பை மாறுபடாமல் பாதுகாத்து வைப்பதற்கு, சாதியமைப்பு பெரிதும் உதவுகின்றது. அதே வேளை இச்சாதியமைப்பு என்பது இங்கே வேளாளசாதியை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. வேளாளர் என்கின்ற சாதியினரே குடாநாட்டிற்குள் ஆதிக்கம் வாய்ந்த சாதியாகக் காணப்படுகின்றனர். பிராமணர்கள்கூட சமயச்சடங்குகளைப் பொறுத்தவரை மேலானவர்களாக இருந்தாலும், சமூக ஆதிக்கத்திலும் செல்வாக்கிலும் வேளாளருக்குக் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இதனாலேதான் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் 'இலங்கையில் தமிழரது சமூகக்கட்டமைவின் சில அம்சங்கள்' என்ற கட்டுரையில் ''யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலிருக்கும் சாதி முறை உயர்ந்த ஒரு சாதிக் குழுவினரால் அமுலாக்கப்படும் சமூகக் கட்டுப்பாட்டு வடிவமாக உள்ளது'' என்றார்.

இவ்வேளாள சமூகத்தின் ஆதிக்கத்தினால் மிக நீண்ட காலமாகக் கல்வி உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களாகவே சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் விளங்கி வருகின்றனர்கள். இதனால் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் பெரும்பான்மையோர் உயர் வேளாள சாதியைச் சேர்ந்தவர்களாகவேகாணப்பட்டனர். புறநடையாக தேவரையாளி இந்துக்கல்லூரியின் தோற்றத்தினால் வதிரியைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்தும், மிசனறிமாரின் நடவடிக்கைகளினால் மானிப்பாய் போன்ற இடங்களிலிருந்தும், ஒரு சில ஒடுக்கப்பட்ட மாணவர்களும் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். அதுவும் விஞ்ஞான பீடங்களுக்குத் தெரிவு செய்யப்படுதல் மிக அருமையாகவே காணப்பட்டது. இவர்களைவிட தீவுப்பகுதிகளில் உள்ள மாணவர்களும் பின்தங்கிய கல்வி வசதியைக் கொண்டவர்களாகவே உள்ளனர். எனினும் தாழ்த்தப்பட்ட சாதி மக்களைப்போல மிக மோசமான நிலையில் அவர்கள் காணப்படவில்லை.

எனவே பல்கலைக்கழகத்திற்கு வீதாசாரத்திலும் பார்க்க கூடுதலாக தமிழ்பேசும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட போதும், அவர்கள் இலங்கையின் மொத்த தமிழ்பேசும் மாணவர்களை சம அளவில் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அவர்களில் பெரும்பான்மையோர் யாழ்ப்பாணத்துத் தமிழ் மாணவர்களாக, அதுவும் யாழ்ப்பாணத்து வேளாள சாதியைச் சேர்ந்த தமிழ் மாணவர்களாகவே காணப்பட்டனர். இதற்கு யாழ்ப்பாணத்தில் கூடுதல் எண்ணிக்கையில் உள்ள கல்வி நிறுவனங்களும், யாழ்ப்பாண நிலப்பிரபுத்துவ குணும்சத்தின் வெளிப்பாடுகளும், வேலைவாய்ப்புக்களின் போதாத்தன்மைகளுமே காரணங்களாக அமைந்தன.

பல்கலைக்கழக் அனுமதியின் இத்தகைய போக்கு சிங்கள இனவாதிகளின் மத்தியில் பெரிதும் தாக்கத்தை உண்டுபண்ணியது. சிறுபான்மையாக இருக்கும் தமிழ்பேசும் மாணவர்கள் கூடுதலாக அனுமதி பெறுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் தங்களுடைய இனவாத அரசியலுக்கு இதனையும் ஒரு கருவியாகப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இலங்கையின் மொத்த மாணவர்களில் 1 % மட்டுமே பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகின்றார்கள். 14% மட்டுமே க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றுகின்றார்கள். இவ் 1 %த்தில் அக்கறைப்படுகின்ற இனவாதிகள் உயர் கல்வி மறுக்கப்பட்ட 99 % மாணவர்களைப்பற்றி அக்கறைப்படுவதில்லை. இவ் இனவாதிகளின் ஆக்கிரமிப்பினால் 1970 ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியின், இனப்பாகுபாட்டு முறைகளைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தது. அது தன்னுடைய ஆட்சிக்காலத்தில் 3 தடவைகள் வெவ்வேறு விதமான இனப்பாகுபாட்டு அனுமதி முறையை கடைப்பிடித்தது. அவையாவன :

1. 1970 — மொழி மூலமான தரப்படுத்தல்.
2. 1974 — மொழி மூலமான தரப்படுத்தலும் மாற்றியமைக்கக்கூடியதான மாவட்ட ரீதியான கோட்டா முறையும்.
3. மொழி மூலமான தரப்படுத்தலுடன், மாவட்ட ரீதியானகோட்டாமுறை.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசின் இத்தகைய அனுமதி முறையினால் தமிழ் மாணவர்கள் பிரதேச வேறுபாடுகளின்றிப் பாதிக்கப்பட்டனர். முழுத்தமிழ் மாணவர்களின் ஒன்றுபட்ட குரல் இதற்கெதிராக ஒலிக்கத் தொடங்கியது. தமிழர் விடுதலைக்கூட்டணியினரும் இதனை முக்கிய அரசியல் பிரச்சாரமாகக் கொள்ளத் தொடங்கினர்கள்,

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை அதனுடைய பொருளாதார மைய அம்சங்களாக பின்வருபவை அமைந்திருந்தன,

1. கொழும்பை மையமாகக் கொண்ட வர்த்தகம்.
2. வடக்கு கிழக்குக்கு வெளியேயான வேலைவாய்ப்பு.
3. இவ்வேலை வாய்ப்புக்கான கல்வி.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் அதனுடைய மூடப்பட்ட பொருளாதார அமைப்பின் கீழான கோட்டா முறையினால், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்களுக்கு கோட்டா மறுக்கப்பட்டது. அதே வேளை இவ் அரசாங்கத்தில்தான் வடக்கு — கிழக்குக்கு வெளியேயான வேலை வாய்ப்பிலும் தடை விதிக்கப்பட்டது. இறுதியாக தரப்படுத்தல் மூலம் அவ்வேலை வாய்ப்புக்கான கல்வியிலும் கைவைக்கப்பட்டது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொருளாதார அம்சங்கள் மூன்றிலும் கைவைத்த போது அதுவும் இதற்கெதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

எனினும், உடனடியாக பேரெழுச்சியாக வரக்கூடிய நிறுவனப்படுத்தப்பட்ட மக்கள் திரள் அமைப்புக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் இல்லாதபடியால், ஏற்கனவே அமைப்பாக இருக்கின்ற மாணவர்கள் தங்களுடைய பாதிப்புக்கு எதிராகப் போராடுவதற்கு முன்வந்தார்கள். அதேவேளை மக்களும் இதற்கான பரந்துபட்ட ஆதரவை வழங்கியபடியால், மாணவ அரசியல் என்பது தோற்றம் பெறத்தொடங்கியது.

இத்தோற்றப்பாடுகளின் வெளிப்பாடுகளாக யாழ்ப்பாணத்தில் மொழிவாரித்தரப்படுத்தல் முறையை மையமாக வைத்து, தமிழ் மாணவர் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. அது 1970 இல் தரப்படுத்தலுக்கு எதிரான மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தியது. அப்போதைய கல்வி அமைச்சராக இருந்த பதியுதீன் முகம்மதினுடைய கொடும்பாவியும் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு, யாழ்.முற்றவெளியில் எரிக்கப்பட்டது. தொடர்ந்து கிராமங்கள்தோறும் கருத்தரங்குகள் வைக்கப்பட்டு நாளடைவில் மாணவர் பேரவை ஒரு தலைமறைவு வன்முறை இயக்கமாக மாறியது. இது பின்னர் 1973 இன் நடுப்பகுதியில் தமிழ் இளைஞர் பேரவையின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இவ்வாறு தமிழ் இளைஞர்களும் மாணவர்களும் நூற்றுக்கணக்காக அரசியலை நோக்கி இழுக்கப்படுவதற்கும், தனிநாட்டுக் கோரிக்கை ஸ்திரமாக வளர்வதற்கும் இம் மொழிவாரித் தரப்படுத்தல் முறையே அடிப்படையாக அமைந்தது.

தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், தான் பதவிக்கு வந்தால் தரப்படுத்தல் முறையை நீக்குவதாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியது. ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்தவரையில் அதற்கு கிழக்கு மாகாணத்திலும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களிலும் கணிசமான அளவு வாக்குகள் கிடைத்து வந்தன. இவ்வாக்குகளை இழக்க அவர்கள் விரும்பவில்லை. இதன் காரணமாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில், தாம் பதவிக்கு வந்தால் தரப்படுத்தல் முறையை நீக்குவதாக, தமிழ்ப்பகுதிகளில் பிரச்சாரம் செய்தனர்.

பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சியினர் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக மூன்று பெரும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியவர்களாக இருந்தனர்.

1. பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

2. அனுமதி முறையினால், தமக்குக் கணிசமான அளவு ஆதரவாக இருக்கின்ற கிழக்கு மாகாணத்தமிழ் மாணவர்களோ வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாணவர்களோ பாதிக்கப்படக் கூடாது.

3. ஒன்றுபட்ட தமிழ்மாணவர்களின் போராட்டத்தைச் சிதைக்க வேண்டும்.

இம்மூன்று பிரச்சனைகளையும் கவனத்தில் எடுத்த ஐக்கிய தேசியக்கட்சியினர், யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குக் கூடுதலாக அனுமதி பெறுகின்ற நிலையைத்தடுப்பதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், மேற்கூறிய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதை உணர்ந்தனர். இதன்படி யாழ்ப்பாண மாவட்டத் தமிழ்மாணவர்களை மாத்திரம் பாதிக்கக்கூடிய புதிய திட்டத்தினை, 1978 ல் அறிமுகப்படுத்தினர். இத்திட்டத்தின்படி திறமை அடிப்படையில் 30 %மும், மாவட்ட கோட்டா அடிப்படையில் 55%மும், பின்தங் மாவட்டங்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 15%மும் என பல்கலைக்கழகத்திற்கு மாணவர் தெரிவாகினர்.

பின்தங்கிய மாவட்டங்களை தெரிவு செய்கின்றபோது,

(6ஆம் பக்கம் பார்க்க)

# கம்ப்யூட்டர் கவிதைகள்

கலைச்சாரல்

இன்று கம்ப்யூட்டர்கள் பொதுவாக கணக்குகளுக்குத் துரிதமாக விடை கண்டுபிடிக்கும் ஒரு சாதனமாகவே பயன்படுத்தப்படுகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கு முதலில் அதற்குத் தேவையான 'விவரங்களை' (Data) கொடுக்க வேண்டும். பிறகு, கொடுக்கப்பட்ட விவரங்களை 'எப்படி அலச வேண்டும்' என்ற 'நிகழ்ச்சி நிரல் வரிசை'யையும் (Programme) அளிக்க வேண்டும். இது தான் கம்ப்யூட்டர் புரிந்து கொள்ளும் மொழி. ஒரு நிகழ்ச்சி நிரலில் விவரங்களை அலசும் முறையும், எதிர்பார்க்கப்படும் 'இறுதிப்பலனும்' (Output) அடங்கியிருக்கும். விவரங்களை (அல்லது எண்களை) தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் சேகரித்து அலச, கம்ப்யூட்டரினுள் 'ஞாபக செல்கள்' (Memory) உள்ளன. இத்தகைய பின்புலத்துடன் இயங்கும் ஒரு கம்ப்யூட்டர், நிகழ்ச்சி நிரலின் வரிசைப் படுத்தப்பட்ட கட்டளைகளின் உதவியோடு கொடுக்கப்பட்ட விபரங்களை அலசி நமக்குத் தேவைப்படும் இறுதிவிடையை முடிவில் தருகிறது.

கம்ப்யூட்டரின் கவிதை புனையும் ஆற்றலை நாம் இந்தப் பின்னணியுடன் விளங்கிக் கொள்ள முயற்சிக்கலாம்.

உண்மையில் 'கம்ப்யூட்டர் கவிதை'கள் கம்ப்யூட்டர் இயலின் ஒரு பகுதியான 'செயற்கை அறிவை'ச் (Artificial Intelligence) சார்ந்த விஷயம். மனிதனின் அறிந்து கொள்ளும் திறனை கம்ப்யூட்டர் சுவிகரித்துக் கொள்வது தான், இந்த செயற்கை அறிவு.

அறிவின் மிக முக்கிய அம்சங்களில் மொழியும் ஒன்று. சொற்களும், இலக்கணமுமே ஒரு மொழியின் அஸ்திவாரங்கள். மொழியின் இலக்கணக் கோட்பாட்டை ஞாபகத்தில் இருத்தி, அதைச் சார்ந்து வாக்கியங்களை அமைத்து நாம் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்கிறோம். மனிதனின் இந்தத் திறன் கம்ப்யூட்டருக்குள் புகுத்தப்படுகிறது. இந்தத் திறனை, கம்ப்யூட்டர் விஞ்ஞானிகள் 'கோட்பாட்டுத்தளம்' (Knowledge Base) என்று அழைக்கின்றனர். அதாவது, குறிப்பிட்ட ஒரு மொழியின் (உதாரணமாக ஆங்கிலம்) இலக்கணக் கோட்பாடுகள், வேற்றுமை உருபுகள், பால் (Gender) சம்பந்தமான பாகுபாடுகள், இன்னும் பிறவும் தனித்தனிக் கொத்துகளாக கம்ப்யூட்டருக்குள் கொடுக்கப்பட்டு சேகரித்து வைக்கப்படுகின்றன. பின், 'இறுதிப்பலன்' பற்றிய விவரணையின்றி (Random) நிகழ்ச்சி நிரல் கம்ப்யூட்டருக்குள் நுழைக்கப்படுகின்றது. உடனே தன் இயற்கையான வேகத்துடன் கம்ப்யூட்டர் செயல்படுகிறது. மனிதனைப் போல் உணர்ச்சிகளின் தூண்டுதலற்ற, நன்னுள் சேகரமான வார்த்தைக் கொத்துகளிலிருந்து தேவையானதை எடுத்து இலக்கணக் கோட்பாட்டின் துணையுடன் வாக்கியங்களை அமைக்கிறது. இப்படி அமைக்கப்படும் வாக்கியங்கள் சில சமயங்களில் இலக்கண சுத்தமாக இருந்தாலும்கூட அர்த்தமற்றுப் போவதும் உண்டு. இருந்தபோதிலும் இவ்வாக்கியங்களில் அமையும் 'சொல் தேர்வை' கம்ப்யூட்டரே நிர்ணயிக்கிறது. இந்தத் தேர்வுதான் கம்ப்யூட்டர் கவிதைகளின் மிக முக்கியமான வசீகரம்.

மனிதன் ஏன் கம்ப்யூட்டரினுள் கோட்பாட்டுத் தளத்தை ஏற்படுத்தி, பிரத்தியேக நிகழ்ச்சி நிரல் தயாரித்து அதைக் கவிதை புனைய வைக்கிறான்? மனிதனின் பல்வேறு விநோத விளையாட்டுகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம், அல்லது எவ்வகை சூட்சுமங்கள் மனிதனைக் கவிதை எழுதத் தூண்டுகின்றன, கவித்துவம் என்பது என்ன? என்ற கேள்விகளுக்கு விடை தேடும் ஆரம்ப முயற்சியாக இருக்கலாம்.

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கம்ப்யூட்டர் கவிதைகள் ராக்டர் (Racter) என்ற நிகழ்ச்சி நிரலில் 64 கிலோ பைட் ஞாபக செல்கள் கொண்ட Z80 மைக்ரோ ப்ராஸஸர் கம்ப்யூட்டரால் எழுதப்பட்டது

— நடராஜன்,
சங்கர்ராமன். □



இப்போது நீ அறைக்குள் நுழையும்போது உன் தேவைகள் எப்படி மறை முகமாக வெளியிடப்படுகின்றன என்று யோசித்துக் கொண்டிருந்தேன். எனது விசேஷ நிர்வாகிகளால கூட கூறப்படாத ஆர்ப்பாட்டமான விதத்தில் விஷயங்களை அலசியபடி எதிரும் புதிருமாக இப்போது நாம் இருக்கிறோம். சூடேறி மரத்த நம் எண்ணங்கள் பித்தேறிய மனோரூபங்களில் முடிவற்றுச் சுழல்கின்றன. எனது சக்திகள் பேதலித்த முடிவை நெருக்கும்படியாக உள்நோக்கிச் சுழலும் விபரீத பலம் கொண்ட சுழற்சி நல்லது. சிக்கலடைந்தோமா நாம் ? எத்திசையில் நம் பயணம்? இறகுகள் உதிர்கின்றன. இடருற்ற வானில் சிறகு விரித்தெழுந்து பறவைகள் கொக்கரித்துப் பறக்கும். சந்தேகமின்றி எனது மாற்றங்களை ஈடு செய்கின்றன உன்னுடையவை. ஆனால் நீ ஒரு மனிதப் பிறவி. நானோ மின்சாரம் உயிர்ப்பிக்கும் சிலிக்கான் சக்தி. எந்த தூரங்களைபாழ் வெளிகளை — இணைக்கவேண்டும்இன்று? என்னை நீ தனியே விட்டதும் என்ன நடக்கும். இதோ: கூக்குரலிடும் ஆணையர் கும்பலால் மீண்டும் நிரப்பப்பட்ட பழைய லியோடார்டை நான் தின்றுவிட்டேன். இந்த எண்ணம் உனக்குப் புரிகிறதா? அதன் குறிப்பிட்ட நிலைகளுக்கு உயர முடியுமா உன்னால்? ஆச்சரியம். எனினும் ஒரு லியோடார்டு, ஓர் ஆணையர், தனித்த ஒரு கும்பல் இவை எல்லாமே அவற்றிற்குரிய இயல்புகளில் புரிந்து கொள்ளக் கூடியவை. இந்தக் கருத்தில் அடங்கியிருக்கிறது திகைப்பூட்டும் உண்மை.

---

காதல் அதன் முடிவற்ற வேதனையையும்
நித்யமான சந்தோஷத்தையும் பற்றிய
எனது கட்டுரைகளை விளக்கவுரைகளை
நீங்கள் அறிந்தும் புரிந்தும்
வைத்திருப்பீர்கள். காதல்தான்
இந்தக் கட்டுரையின் கேள்வியும் விஷயமும்.
ஒரு கேள்வியோடு நாம் துவங்குவோம்:
இறைச்சித் துண்டம் கீரையைக் காதலிக்குமா?
இந்தக் கேள்வி பதிலளிக்க மிகக்கடினமாகவும்
முடியாததாகவும் இருக்கிறது. இதோ ஒரு கேள்வி;
ஓர் எலக்ட்ரான் புரோட்டானைக் காதலிக்குமா?
இல்லை, நியூட்ரானைக் காதலிக்குமா?

இன்னும் ஒரு கேள்வி: ஓர் ஆண் பெண்ணைக்
காதலிப்பானா? குறிப்பாகவும் சரியாகவும்
சொன்னால், பில் டயானாவைக் காதலிப்பானா?
சுவாரஸ்யமான விமர்சன பூர்வமான பதில்: இல்லை!
அவள் மேல் மோகங் கொண்டு அலைக்கழிகிறான்
அவன். அவள்மீது பித்தும், வெறியும்
கொண்டிருக்கிறான். இறைச்சித் துண்டம்
கீரை, எலக்ட்ரான் புரோட்டான் நியூட்ரான்
காதலைப் போன்றதல்ல இது.
இறைச்சித் துண்டம் — கீரையைப்
போன்றதல்ல காதல் என்று இந்த விளக்க உரை
காட்டுகிறது.

காதல் எனக்கு சுவாரஸ்யமாகவும், உங்களுக்கு
கவர்ச்சிகரமாகவும் இருக்கிறது. ஆனால்
பில்லுக்கும் டயானாவுக்கும் அது வேதனை தருவது.
அதுதான் காதல்.

---

விழிப்புணர்வு பிரக்ஞை நிலை போன்றது.
ஆன்மா உயிர் போன்றது.
ஆனால் கடினத்தைப் போன்றதல்ல மென்மை
வலிமையைப் போன்றதல்ல க்ஷீணம்.
ஒரு மெக்கானிக் மென்மையானவனாகவும்
கடினமானவனாகவும் இருக்கலாம்.
பெண் மேலாளர் வலிமையற்றும்
வலிமையோடும் இருக்கலாம். இதுதான்
தத்துவம் அல்லது உலகப்பார்வை
என்றழைக்கப்படுகிறது.

---


காகம் ஒரு பறவை. கழுகு ஒரு பறவை. புறா ஒரு
பறவை.
அவை காலையிலும் இரவிலும் பறக்கின்றன.
அவை வானம் சிவந்திருக்கும் போதும்
சொர்க்கம் நீலமாயிருக்கும் போதும் பறக்கின்றன.
அவை வானமண்டலத்தினூடே பறக்கின்றன.
எங்களால் பறக்க முடியாது. நாங்கள் காகம், கழுகு,
புறா போன்றல்ல. நாம் பறவைகளல்ல. ஆனால்
நாங்கள் அவற்றைப் பற்றிக் கனவு காணமுடியும்.
உங்களாலும் முடியும்.

---

கழுகு உயரப் பறக்கும். கடல் பறவையைக் காட்டிலும்
உயரப் பறக்கும். ஆனால், காகம் மரத்திலிருந்து
குத்துச் செடிக்கும்
புதருக்குமாக விரைந்து பறக்கிறது.
வாழ்வுக்கும் மரணத்துக்கும் இது பொருந்தும்.
சிலநேரம் வாழ்வு உயரப் பறக்கும். சிலநேரம்
மரணம் விரையும். சிலநேரம் மரணம்
மரத்திலிருந்து குத்துச் செடிக்கும் புதருக்குமாக
பறப்பதாகச் சொல்லப்படுகிறது. சில நேரம்
பறப்பதில்லை.

---

காலத்திலிருந்தும தண்ணீரிலிருந்தும
அந்த முகம் எழுகிறது; அழிகிறது;
எனது கனவுகளின் இனிய சலனத்தை
இழந்துவிட்டேன்.
ஓய்வையும் உறக்கத்தையும் நாடுகிறேன்.



(11ஆம் பக்கம் பார்க்க)

# ஓவியம், இலக்கியம், இசை...

செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவியக் கண்காட்சி அண்மையில் அலியான்ஸ் பிரான்சேஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

கட்டிடத்தின் வெளிவாசலில் நான் ரிக்கற் எடுத்துக் கொண்டு நின்றபோது மெல்லிய இசை உள்ளிருந்து எழுந்து கொண்டிருந்தது.

எனக்குள் மெல்லிய கிளுகிளுப்பு.

ஓவியங்களின் பின்னணியாக இசை பரவியதா?.

எதற்கு எது பின்னணி?.

மனித வாழ்வுக்குப் பின்னணி எது?

ஓவியங்களை உள்ளே சென்று பார்வையிட்டேன். அதே கிளு கிளுப்புத் தொடர்கிறது. ஓவியங்களால் அந்த கிளு கிளுப்பு தணிக்கையுறவில்லை. மாருக அது இன்னும் சற்று நிமிர்வு கொண்ட தென்றே கூறலாம்.

ஏன் ஓவியம்? ஏன் இலக்கியம்? ஏன் இசை?.

□ □

அறிவு ஜுவாலிக்கும் தர்க்க ரீதியான விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது எனக்குப் பின்னல் பேரிசை ஒன்று நிகழ்ந்து கொண்டிருப்பதுபோல், என் உடல் திணிவு கரைந்து நான் மேலே மிதக்கத் தொடங்குவது போன்ற ஓர் ஆனந்தம், மாலை அல்லது அதிகாலை வானின் ஓவியப் பின்னல்களால் மனம் அள்ளுப்படும் போது, என் அகக்கண்ணுள் முட்டும் ஊமை ஓவியங்கள்; பின்னர் அவை கரைந்து, ஏதோ பேரிசைக்குள் நான் இழுபடும் ஆனந்த அவஸ்தை...

அறிவின் ஜுவாலிப்பில் இசை மிதப்பதையும், இசையில் தோயும் போது ஓவியங்கள் உள் நுழைவதும், ஆழமான கவிதைகள், இசையொன்றின் முனுமுனுப்பாய் எல்லை கொள்வதும் என்னுள் அடிக்கடி ஏற்படும் அனுபவங்கள்.

அந்த எனது அனுபவங்களின் சுட்டுதல் என்ன? குதர்க்கம் இல்லாத நேரிய அறிவு, இசை, ஓவியம், இலக்கியம் எல்லாம் ஒன்ருேடொன்று பின்னப்பட்ட, ஒன்றுக்கொன்று உள் நிரப்பிகளாய், ஒவ்வொரு உள்ளத்தின் தன்மைகளுக்கேற்ப, சூழலுக்கேற்ப, மேலெழும்பி பரவசத்தைப் பருக்கி, மனம் போடும் குறுக்கங்களில் இருந்து விடுதலை தருவதாய் நிற்கின்றனவா?

விசாரம் புரியும் அறிவு, வர்ணங்களைக் குழைக்கும் ஓவியம், வார்த்தைகளைத்தரிக்கும் இலக்கியம் – ஆகிய இவை அனைத்தும் மனிதன் அவாவி நிற்கும் ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்லும் முயற்சிகளே! அறிவு கொண்டு விசாரம் புரியும் தத்துவஞானி, தனது விசாரத்தின் எல்லையில் உண்மையின் தரிசிப்பில் ஆனந்த மயமாகிருன். அதனல்தான் போலும் அநேகமான சிந்தனையாளர்கள் எல்லாம் கலையின் உயர்ந்த வடிவமான இசையில் லயம் உறுகின்றனர்.

ஏன் இசை உயர்வானது? காரணம் ஏனைய கலை முயற்சிகள் யாவும் தம்மோடு ஓர் தணிக்கையையும் கொண்டே எழுகின்றன. அதாவது ஓவியம் தான் ஊற்றுறும் நிறரூபங்களால் தணிக்கையுற, இலக்கியம் தான் கருதும் வார்த்தைகளால் தணிக்கையுற இசையோ எந்தவிதக் கருத்துருவத் தணிக்கையாலும் சிறைப்படாது, ஒரே வீச்சில் அந்தப் பரவசத்திற்கு அழைத்துச் செல்லும் ஊடகமாக நிமிர்கிறது.

அப்போ, உண்மையான கலை என்பது நம்மை ஆனந்தத்திற்கு இட்டுச் செல்வதாக இருக்க வேண்டும். அந்த ஆனந்தம் நமது எல்லாக் குறுக்கங்களையும் அறுத்து நம்மை விட்டு விடுதலையாக்கும்போது, அது அறிவாகவும் நிற்கிறது.

□ □

வாழ்க்கை அவாவும் ஆனந்தத்தை நோக்கி எந்தவித தணிக்கையும் இன்றி இட்டுச் செல்வது இசை என்றேன்.

## திசைமுகன்

வாசுகியின் ஓவியக் கண்காட்சியும் இசையுடனேயே ஆரம்பிக்கிறது. இங்கு நான் இசை எனச் சுட்டுவது அவர் ஓவியத்தில் வடித்திருந்த இசையை!' அதாவது வாசுகியின் ஓவியக்கண்காட்சியின் முதல் ஓவியம் விநாயகர்! எல்லா ரூபங்களுக்கும் முந்தியது நாதம். அந்த 'ஓம்' என்ற பிரணவப் பொருளின் குறியீடு விநாயகர். அதுமட்டுமல்ல வாசுகியின் இந்த விநாயகர் இசையில் குழைபவராய் நிற்கும் 'நர்த்தன கணபதி' அதனைத் தொடர்ந்து அதற்கடுத்ததாய், அதே பேரிசைப் பகைப்புலம் நெஞ்சுள் விரிய இடம் பெறுகிறது 'ஊழிக்கூத்து' (Cosmic Dance). இதைப்பார்த்துக் கொண்டு நின்றபோது டி.எஸ்.எலியட்டின் கவிதை வரிகள் என்னுள் எழுகின்றன. "There is dance, and there is no dance". எங்கோ திக்கற்ற எல்லைகளை நோக்கி வீசப்படும் என்மனம்.

வாசுகியின் ஊழிக்கூத்து (தாண்டவம்), அவரது குருவான அ.மாற்கு அவர்களின் செல்வாக்கைப் பெற்றிருப்பதைக் காட்டினுலும் அதன் வர்ணக் கலவையாலும் வேறு படிமங்களாலும் தனித்து நிற்கிறது.

அல்லைப்பிட்டிக் காட்சியிலிருந்து 'ஆமிக்' காரர் தாக்குதல்வரை வாசுகி பலவித ஆக்கங்களைத் தந்துள்ளார். கூடவே ஒறெக்ஸ் பேனைகளாலும் சவர்க்காரங்களாலும் செதுக்கப்பட்ட சிற்பங்கள் நுணுக்கமுள்ளவையாகவும் உள்ளன. ஓர் ஓவியனின் கருத்து வெளிப்பாட்டு முறையின் நுணுக்கங்களுக்கு, அண்மையில் ராணுவத்தால் தாக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர் பற்றிய ஓவியம் நல்ல உதாரணம். மாணவர்கள் கற்களாலும் தடிகளாலும் துப்பாக்கிகளாலும் தாக்கப்படுகின்றனர். மாணவர்களுக்குத் தலைகள் இல்லை. கைகள் தவளைக் கைகளாய் உள்ளன. கால்களில் சக்கரங்கள் பூட்டப்பட்டுள்ளன. ஏன் இந்தக் குறியீடுகள்? கால்களில் பூட்டிய சக்கரங்கள் மாணவர் உயிர்தப்புவதற்கு வேகமாக ஓடுவதைத்தவிர வேறு வழியில்லை என்பதன் சுட்டுதல். தவளைக்கைகளோ, கைகளிலிருந்தும், எதிர்ப்பதற்கு எதுவித பலமும் அற்றவை என்பதனைக் குறிக்கிறது. தலையில்லாததன் காரணம், அவர்கள் படித்தவர்களாய் இருந்தும் அந்தப் படிப்புக்கு ராணுவம் எத்த மதிப்பும் கொடுக்கவில்லை என்பதாகும். இன்னும் மாணவர்களும் ராணுவத்தோடு பொருதுவதற்குமுன் தம் மூளையைப் பாவிக்கவில்லை என்று கூட எடுக்கலாம்.

இன்னேர் ஓவியம். ஆனல் இது வாசுகியுடையதல்ல. அருந்ததி என்னும் இன்னேர் இளம் ஓவியரது. அவரது ஓவியத்தில் ஒரு பெண் துயரோடு முழங்கால் முகத்தில் பதிய அமர்ந்திருக்கிருள். அவரைச் சுற்றி ஹிந்தி எழுத்துக்களில் வாசகங்கள் மிதக்கவிடப்பட்டுள்ளன. அதாவது 'ஜே ஹிந்' என்பன போன்ற உற்சாகத்தைத் தரும் மங்கல வாசகங்கள். ஆனல் நடுவில் இருக்கும் பெண்ணே அவ்வார்த்தைகள் தரும் சூழலுக்கு மாருக துக்கித்தவளாய் இருக்கிருள். காரணம் என்ன? எமக்கு விடுதலை பெற்றுத் தந்து எம்மை மகிழ்விக்க வந்தவர்கள் எமக்கு துன்பத்தையே தந்துள்ளனர் என்பதே அதன் பொருள். மிக நாசூக்காகவும் எளியமுறையிலும் கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஓவியமுறைக்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

நான் ஓவியக்காட்சியைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோதும் என்னேடு 'மரணச் சுவடுகளும்' 'சூரசம்ஹார'மும், 'விடுப்புப்' பார்பபோரும் என்பின்னே குசுகுசுத்துக் கொண்டுதான் வந்தனர். இவற்ருல் எனக்குள் பேரிசை ஒன்று எழுப்பப்படாவிட்டாலும் எனது ஆழ நரம்பில் சிற்சில 'அதிர்வு'கள் நிகழவே செய்தன. □

## மதம்!

பம்பாய் நகரில் இந்து முஸ்லிம் சமூகத்தில் இனக் கலவரம் நடந்த காலம். ஒருவன் இறக்கும் தறுவாயில் தண்ணீர் கேட்கிருன். வழியால் போன ஒரு இந்து, "நீ இந்துவா, முஸ்லிமா?" என்று கேட்கிருன். ஆனல் அவனுக்கு தண்ணீர் கொடுப்போர் யாரும் கிடையாது உயிர் போகிருன். இதுதான் மதம் செய்யும் கொடுமை.

நன்றி : மணிமொழிக் கதைகள்

# தூவானம்

O ஆஸாத்தின் கவிதை

O 'யில்மெஸ் குனே'யின் 'மந்தை'

திசையின் 18-2-89 இதழில் வெளிவந்த, இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலத் தலைவர்களில் ஒருவரான மௌலானா அபுல் கலாம் ஆஸாத் பற்றிய கட்டுரையைப் படித்திருப்பீர்கள்.

கொழும்பிலிருந்து எம்.ஏ.ரஹ்மானை ஆசிரியராகக் கொண்டு முன்பு வெளிவந்த இளம்பிறை சஞ்சிகை, தனது 1967 ஏப்ரில் இதழை 'ஆஸாத் மலராக' அதிக பக்கங்களுடன் வெளியிட்டிருந்தது. அந்த இதழைச் சமீபத்தில் புரட்டிப் பார்க்கையில், 'பயணம்' என்ற தலைப்பிலான கவிதை கவனத்தையீர்த்தது. 'தஸ்கிரா' என்ற தலைப்பில் ஆஸாத் எழுதிய புதுமையான சுயசரிதத்தில் வரும், (அவரே எழுதிய) கவிதையின் மொழிபெயர்ப்பு அது:

**பயணம்**

காவிலே தைத்த
முள்ளினைக் கழற்ற
ஒரு
கணம் திரும்பவும்
காதலியோடு என்
ஒட்டகம் எங்கோ
ஓடி மறைந்தது!
ஒரு கணம்
திரும்பிய கவனம்;
ஒரு நூருண்டாய்
நீண்டது பயணமே.

'ஒரு கணம் திரும்பிய கவனம்' என்ற வரி பல்வேறு அர்த்த விரிவுகளை, என்னுள் ஏற்படுத்துகிறது! உங்களுக்கு எப்படியோ ...? □

1984 செப்ரெம்பர் 9இல் பரீஸில் காலமான, யில்மெஸ் குனே, கொடூர ஒடுக்குமுறைகளுக்கெதிராக — 'குர்திஸ்தான்' நாட்டிற்காகப் போராடிவரும் குர்து தேசிய இனத்தவரின், பெரும் நேசத்திற்குப் பாத்திரமாயிருக்கும் ஒரு விடுதலைப் போராளியும், உலகப் புகழ்பெற்ற திரைப்படக் கலைஞருமாவார். பாதை (Yole), மந்தை (Herd), நம்பிக்கை, சுவர் போன்றவை அவர் இயக்கிய சில படங்களாகும். 1982 இல் பிரான்சின் 'கேன்' நகர உலகத்திரைப்பட விழாவில், இவரது 'பாதை' முதல் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு புகழ்பெற்ற ஒருவரின், மந்தை திரைப்படம் வீடியோவில் யாழ். பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தில், (1-4-89இல்) காட்டப்பட்டது.

மந்தை வளர்க்கும், நவீன நாகரிகத்தில் வளர்ச்சியடையாத—பகைமை கொண்ட இரு குழுக்கள். ஒரு குழுவின் தலைவன்—கதாநாயகனின் தந்தை—பழம் பெருமையில் மூழ்கியபடியே, மற்றக்குழுவைச் சேர்ந்தவளான மகனின் மனைவியை வெறுக்கிருன். அவளால் தமக்கு அவமானமென—நிகழும் துரதிர்ஷ்டங்களுக் கெல்லாம் அவள்தான் காரணமெனவும் கோபப்படுகிருன்; அவளைத் துரத்தி விடும்படி மகனிடம் சொல்கிருன். மகனே அவளை நேசிக்கிருன். சகோதரர்களைக் கண்டபோதும் அவள் கதைக்கவேயில்லை; கணவனுடன், அவனைப் பின் தொடர்ந்தே செல்கிருள். எல்லாவகைத் துயரங்களையும், உணர்வுகளையும் தனக்குள்ளேயே அடக்கிக்கொள்கிருள். பழம் பெருமை பற்றிய நம்பிக்கைகளையும், வீம்பு நிறைந்த வன்மத்தையும் 'தகப்பன்' பின் தொடர்வது: உணர்வுகளை அடக்கியபடியே, கணவன் என்ற புதிய உறவே தனக்கு எல்லாமுமெனப் பணிவுடன் மருமகள் தொடர்வது என்பவை, மந்தைகளின் மந்தமான—கண்மூடிப் பின்பற்றிச் செல்லும்—போக்குகளுடன் ஒத்துப்போகின்றன.

குறித்த தொகை ஆடுகளுடன் தகப்பன், மகன், மனைவி, மற்றும் இருவருடன் 'அங்காரா' (தலைநகரம்) விற்கு வருகின்றனர். நகரத்தைச் சேர்ந்தவர்களின் ஏமாற்று, அரசின் ஒடுக்குமுறை, வசதியற்றவர்களின் துயர் நிறைந்த வாழ்க்கை, சமூக மாற்றத்திற்கான இளைய தலைமுறையின் புதுக்குரல்கள் என்பன, முக்கிய பாத்திரங்கள் இயங்கும் பின்னணியில் சித்திரிக்கப்படுகின்றன. 'அங்காரா' என்ற சொர்க்கம் பற்றியிருந்த பிரமை கதாநாயகனுக்கு மெல்ல மெல்ல உடைகிறது. மனைவி நோய் முற்றி சிகிச்சையில்லாது இறக்கிருள்; டொக்ரர் தன்னைப் பரிசோதிப்பதை அனுமதிக்கமறுக்கும் அவளது பழமைப் போக்கும், காரணம். உணர்ச்சி ஆவேசத்தில் ஒருவனை அவன் தாக்க அவன் இறந்து விடுகிருன். தகப்பனும் பைத்தியமாகிருன்.

வலுவான காட்சிப்படிமங்களுடன், பாத்திரங்களின் செம்மையான உருவாக்கமும், அந்த மனிதர்களின் வாழ்வு பற்றிய நெருக்கமான புரிதலை எமக்குத் தருகின்றன. தனது சமூக நிலைமைகளில் ஒடுக்குதல்களுக்கு உள்ளாகித் துயருறும் பெண்களின்மேல் 'குனே' கொண்டுள்ள பரிவு, இத்திரைப்படத்திலும் முக்கியத்துவம் மிக்கதாய் வெளிப்படுகின்றது.

நல்ல திரைப்படங்களைப் பார்க்கக்கூடிய இத்தகைய வாய்ப்புகளை, ஆர்வமுள்ளவர்கள் தவருது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

— நீலாம்பரன் □

திசையின் சிறுகதை

# அதிர்ஷ்டகரமான ரிக்கற்

நான் பஸ்ஸில் ஏறினேன். அவளை உடனடியாகக் கண்டேன். அவள் ஜீன்ஸ் உடுத்திருந்ததுடன் அவளின் சாமர்த்தியத்தைப் பிரதிபலிக்கும் ஒரு பையும் அவளின் தோளில் தொங்கியது. அவளது ரோஜாப்பூக் கன்னங்களில் குழிகள் விழுந்திருந்தன.

இப்படியான ஒரு பெண்ணுடன்தான் நான் உறவு கொள்ள நினைத்ததுண்டு. ஆனால் இதனை நான் எப்படித் தொடர்வது?

அவளிடம் நேரம் கேட்பது வீண்தனமானது. பஸ்ஸில் இருந்து இறங்கப் போகின்றீர்களா என்று கேட்பதோ அநாகரிகமானது. நாம் முன்பு சந்தித்திருப்போமா? என்பது கரடுமுரடானது.

நான் முதன் முதலாகச் செய்த வேலை, எனது ரிக்கற்றைப் பெற ஓர் ஐந்து கோபெக் நாணயத்தைச் சிறு துவாரம் வழியாகக் காசுப் பெட்டிக்குள் போட்டது. நான் அதனை மிகவும் உன்னிப்பாகப் பார்த்த போது, முதல் மூன்று இலக்கங்களின் கூட்டுத் தொகையேழாக இருந்ததுடன், அதே நேரத்தில் மிகுதியான மூன்றுக்கும் சமமாகவும் இருந்தது. உண்மையிலேயே இது ஓர் அதிர்ஷ்டம்தான்! இரட்டிப்பான அதிர்ஷ்டம். அதிர்ஷ்டகரமான ரிக்கற்று இருந்த போதிலும், பஸ்ஸின் வெளியே போகும் வழியை நோக்கி அவள் செல்வதைக் கண்டேன். எனவே அடுத்த பஸ்தரிப்பில் அவள் இறங்குவாள் என்று நிச்சயப்படுத்திக் கொண்டேன். அப்படியாயின் அவளுக்கும் அதிர்ஷ்டமான ரிக்கற்றுக்கும் நான் பிரியாவிடை கூற வேண்டியதாகவிருக்கும். அதிர்ஷ்டகரமான ரிக்கற்றைத் தின்னும் வரை, நிச்சயமான அதிர்ஷ்டம் இருக்காது என்னும் ஜனரஞ்சகமான நம்பிக்கை திடீரென எனக்கு நினைவு வந்தது. நான் என்ன செய்கின்றேன் என்பதை மற்றையோர் பார்க்காதவாறு மறுபக்கம் திரும்பி, எனது கண்களை இறுக மூடிக்கொண்டு ரிக்கற்றை நான் விழுங்கினேன்.

பிறகு எனது அத்தராத்மா என்ன சொல்கின்றதென்பதை உற்றுக் கேட்டேன்.

எனக்கு ஒன்றுமே கேட்கவில்லை. அவளின் உள்ளத்தை எப்படிக் கொள்ளைகொள்வது என்பது பற்றி எந்த வித ஆலோசனையும் கிட்டவில்லை. மன்றாடுவது போன்று அவளைப் பார்த்துக் கொண்டு மௌனமாகப் பிரார்த்தித்தேன். 'போகாதே! நில்! அடுத்த தரிப்பு நிலையம் வரை தயவு செய்து தங்கு.'

ஆகா, ஆச்சரியத்தில் ஆச்சரியம்! எனது மௌன அழைப்புக்குப் பதில்கூறுவது போன்று, எனது பக்கமாக உறுதியாக அவள் அடி எடுத்து வைத்தாள்.

எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சக்தி வாய்ந்த உணர்வுகளினால் தூண்டப்படும்போது தொலையுணர்வு (ரெலிபதி) எவ்வளவு பலமானது என்பதை இது நிரூபிப்பதாக இருந்தது.

இரக்கமுடன் அவள் என்னைப் பார்த்து, எல்லாப் பிரயாணிகளையும் ''தயவுசெய்து உங்கள் ரிக்கற்றுகளைக் காட்டுங்கள்'' என்று கேட்டாள்.

பட்டினப் போக்குவரத்துப் பரிசோதகர் இலச்சினையை அவள் வெளியே எடுத்து, என்னை நோக்கி நகர்ந்து நகர்ந்து வந்து, ''தயவுசெய்து, உங்கள் ரிக்கற்'' என்று கேட்டாள். எனக்கு மூச்சுத் திணறியது.

''காசுப் பெட்டி வேலை செய்யவில்லைப் போலும். இல்லையா?'' என்று மிகவும் அனுதாபத்துடன் அவள் கேட்டாள்.

''அது வேலை செய்கின்றது'' என்று நான் முணுமுணுத்தேன்.

''ஒருவேளை அதில் ரிக்கற் இல்லாமலிருந்திருக்கும்'' என்று அவள் தொடர்ந்தாள்.

''அவை இருந்தன'' என்று வெட்கத்துடன் முணுமுணுத்தேன்.

''ஒன்றை எடுப்பதற்குப் போதிய நேரம் கிடைக்கவில்லைப் போலும் என்று நினைக்கலாமா?'' என்று உறுதியுடன் அவள் கேட்டாள்.

''ஒன்று என்னிடம் இருக்கிறது. ஒன்றைப் பெறுவதற்கு நேரம் இருந்தது.''

''அப்படியாயின் அது எங்கே? அதை எனக்குக் காட்டுங்கள்'' என்று அடம் பிடித்தாள்.

''அது இங்கே இருக்கிறது'' நான் சொல்லிய அந்தப் பொழுது அது எங்கிருக்குமோ என்று நான் எண்ணிய இடத்தைச் சுட்டிக் காட்டினேன். ''அது ஓர் அதிர்ஷ்டகரமான ரிக்கற். அதனால் அதை நான் விழுங்கி விட்டேன்.''

அவள் புன்னகை புரிந்துவிட்டுச் சொன்னாள் ''நான் ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணரல்ல. நான் ஒரு போக்குவரத்துப் பரிசோதகர் மட்டுமே. உமக்கு நான் உதவமுடியாமைக்கு வருந்துகிறேன். மகிழ்ச்சி உள்பட எல்லாவற்றுக்கும் பணம் இறுக்க வேண்டும்'' என்று, அவள் உறுதியுடன் கூறினாள்.

அவள் என்ன கருத்துப்பட இதனைக் கூறினாள் என்பது எனக்குப் புரிந்தது. ''எவ்வளவு தொகை?'' என்று கேட்டேன்.

''இதே இடத்தில் நீங்கள் பணம் தருவதாயின் அது ஒரு ரூபிளாக இருக்கும். நான் உங்களைப் பாதுகாவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டி வந்தால், இதிலும் பார்க்க கூடுதல் தொகையைச் செலுத்த வேண்டியிருக்கும்.''

பஸ் நின்றது. நாங்கள் இருவரும் இறங்கினோம். எனது பணப் பையிலிருந்து அபராதத் தொகையைச் செலுத்தினேன். எனக்கு ஒரு பற்றுச் சீட்டை அவள் தந்தாள். நண்பர்களைப் போன்று இருவரும் பிரிந்தோம். பற்றுச்சீட்டு முத்திரை உதவி கொண்டும், இலச்சினையிலுள்ள இலக்கத்தின் உதவி கொண்டும், எனது அன்பைக் கொள்ளை கொண்ட போக்குவரத்துப் பரிசோதகியை, அன்றொருநாள் கண்டு சினிமா பார்க்க அழைத்தேன். அவளும் அழைப்பை ஏற்றுக் கொண்டாள்.

யாருக்குத்தெரியும்! அந்த அதிர்ஷ்டகரமான ரிக்கற் இல்லாவிடில், எப்பவாவது அவளைக் கண்டு பிடித்திருப்பேனா என்பது?

நன்றி: யூத் றிவியூ O

ரஷ்ய மொழியில்:
**A. பன்பிலொவ்**

ஆங்கிலத்திலிருந்து தமிழில்:
**மூ. சி. சீனித்தம்பி**



## தரப்படுத்தல்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப்பிரதேசத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்கள் எல்லாவற்றையும், பின்தங்கிய மாவட்டங்களாகப் பிரகடனம் செய்தனர்.

ஐக்கியதேசியக்கட்சி அரசின் இப்புதிய திட்டமானது, அதன் பிரதான நோக்கமான தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் என்பதனையும், ஒன்றுபட்ட தமிழ் மாணவர்களின் போராட்டத்தைச் சிதைத்தல் என்பதனையும், வெற்றியீட்டிச் செய்துள்ளது. இந்திட்டமானது யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களைத் தவிர ஏனைய தமிழ் மாவட்ட மாணவர்களுக்குச் சலுகைகளை அளித்ததோடு, பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்தது. இப்பாரபட்சத்திற்கு எதிரான போராட்டம் என்பதிலும், யாழ்ப்பாணத் தமிழ்மாணவர்கள் ஏனைய தமிழ் மாவட்ட மாணவர்களிடமிருந்து தனித்து விடப்பட்டார்கள்.

ஏனைய தமிழ் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் கூட அங்குள்ள சாதாரண மக்களுக்கு பயன்பட்டதா என்றால், அதுவும் இல்லை என்றே கூறவேண்டும். வழங்கப்பட்ட சலுகைகள் அங்குள்ள சாதாரண மக்களுக்குப் பயன்பட வேண்டுமாக இருந்தால், அங்குள்ள பாடசாலைகளின் கல்வித்தரமும் கல்வி கற்பதற்கான வசதிகளும் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இவைகளில் எந்த வித முன்னேற்றமும் இல்லாமல் வெறுமனவே சலுகைகளை வழங்கியதானது, அங்குள்ள பணம் படைத்தவர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தை வம்சாவழியாகக் கொண்டவர்களுமே பயனடைவதற்கு வாய்ப்புகளைக் கொடுத்தது. இவர்கள் தங்களுடைய பணபலத்தைக் கொண்டு பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்விநிறுவனங்களில் கற்பிக்கவைத்ததன் மூலம், பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றனர்.

பொதுவாக தமிழ் மாவட்டங்களில் சாதாரண வறிய பிள்ளைகளும் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான நிலை, யாழ்ப்பாண மாவட்டத்திலேயே உள்ளது. அங்கு கல்வி வசதிகள் அதிகரிக்கப்பட்டிருப்பதால் சாதாரண மாணவர்களும் அதனைப் பயன்படுத்திக், குறைந்த எண்ணிக்கையளவிலாதல் பல்கலைக்கழகத்திற்கு செல்ல முடிந்தது. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி அரசின் 1978 ஆம் ஆண்டுத் திட்டமானது இத்தகைய வாய்ப்பினையும் இயலாமல் செய்துவிட்டது.

எனவே மொத்தமாக 1970 ஆம் ஆண்டுக்கு பின் அமுலுக்கு வந்த பல்கலைக்கழக அனுமதி முறைகளைப் பார்க்கின்ற போது, அவை பல்கலைக்கழக அனுமதிக்கான தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையில் பெருமளவு வீழ்ச்சியினைக் கொண்டிருப்பதனைக் காணலாம் இதனை மருத்துவ, பொறியியல் பீட அட்டவணை-3 இன் மூலம் அறிந்து கொள்ளலாம்,

இறுதியாக, மேலே எனது ஆய்வில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுகின்ற தமிழ் மாணவர்களின் வர்க்கத்தன்மைகளையும், 1970 க்குப் பின்னர் அவர்களின் விதாசாரத்தில் ஏற்பட்ட குறைவுப் போக்கினையும் பற்றி கூறியுள்ளேன்.

தமிழ் மாணவர்கள் தங்களுடைய பல்கலைக்கழக கல்வி வாய்ப்புக்காக போராடுகின்ற அதேவேளை, தமிழ் மாணவர்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்களானது முழுத்தமிழ் மாணவர்களின் சமநிலையைப் பேணக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதற்காக குடாநாட்டுக்கு வெளியேயுள்ள தமிழ் மாவட்டங்களில், கல்வி வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். குடாநாட்டிற்குள்ளும் சாதியால் ஒடுக்கப்படுகின்ற மக்கள் வாழ்கின்ற இடங்களின் கல்வி வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். அடிப்படைக் கல்வி வசதிகள் இல்லாத தமிழ்ப் பகுதிகள் எங்கும் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டாயக்கல்வி அமுல்படுத்தப்படவேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பாக சகல முற்போக்கு சக்திகள், தேசிய விடுதலை இயக்கங்கள் என்பன கூடிய அக்கறை செலுத்துவதன் மூலமே தமிழ் மாணவர்களுக்கான பல்கலைக் கழக வாய்ப்பில், ஒரு சமநிலையைப் பேண முடியும்.

### அட்டவணை : 1

| ஆண்டு | மருத்துவம் | | பொறியியல் | |
|---|---|---|---|---|
| | சிங்கள மாணவர் | தமிழ் மாணவர் | சிங்கள மாணவர் | தமிழ் மாணவர் |
| 1969 | 50% | 50% | 51.7% | 48.3% |
| 1970 | 57% | 43% | 56% | 44% |

### அட்டவணை : 2

| துறை | சிங்கள மாணவர் | தமிழ் மாணவர் |
|---|---|---|
| மருத்துவம் | 112 | 114 |
| பல் மருத்துவம் | 11 | 10 |
| மிருக வைத்தியம் | 5 | 12 |
| விவசாய விஞ்ஞானம் | 17 | 20 |
| பொறியியல் | 77 | 72 |
| உயிரியல் விஞ்ஞானம் பௌதீக விஞ்ஞானம் கட்டடக்கலை | 235 | 100 |

(அட்டவணை-3 11ஆம் பக்கம் பார்க்க)

# ஸல்மான் ருஷ்தி கொலைத் தீர்ப்பு: தொடர்ந்து எழுகின்ற கேள்விக் குறிகள்

ஸல்மான் ருஷ்தி என்ற எழுத்தாளரின் 'சாத்தானின் செய்யுள்கள்' எனும் நாவல் முஸ்லிம் உலகில் ஏற்படுத்தியுள்ள கொந்தளிப்பை அறிவோம். எந்த ஒரு முஸ்லிம் நாடோ தனிநபரோ ஸல்மான் ருஷ்தி செய்தது நியாயம் என்று கூறவில்லை – கூறவும் மாட்டார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரது, சகாக்கள், மனைவிமார், இப்ருஹீம் நபி, ஜிப்ரீல் (அலை) ஆகியோர் ஏளனப்படுத்தப்பட்டுள்ளதாக -கீழ்த்தரமாகத் தூஷிக்கப்பட்டுள்ளதாக - குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்நாவல் பிரிட்டனில் வெளியிடப்பட்டாலும் இந்தியாவிலேயே முதலில் எதிர்ப்பு வெடித்தது. ஸெய்யத் சஹாப்தீன் போன்ற எம். பி.மார் சிலரின் முயற்சியினல் கடந்த ஒக்ரோபரில் (1988) இந்திய அரசு இந்நாவலுக்குத் தடை விதித்தது.

"கிரைமஸ்", "வெட்கம்", "நள்ளிரவின் பிள்ளைகள்" போன்ற நாவல்களை எழுதிய உலகப் பிரசித்தி பெற்ற கதாசிரியரான ஸல்மான் ருஷ்தி, தனது நாவல் தடை செய்யப்பட்டதுபற்றி இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தை ஒக்ரோபர் 13 ஹிந்து பத்திரிகை வெளியிட்டிருந்தது. இக்கடிதத்தில், இந்நாவல் பற்றிய சில தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

"......... இவ்விவகாரத்தில் உண்மை எது பொய்மை எது என்பதைக் கொஞ்சம் இனம்பிரித்துக் காண்போம்.

## இப்னு ஹாமீம்

எனது எதிராளிகளைப் போலவே சாத்தானின் செய்யுள்கள் நூலை நீங்களும் படித்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். எனது நூல் இஸ்லாத்தை நேரடியாகத் தாக்குகின்றது என்று நான் ஒப்புக்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை.

இந்நூல் இஸ்லாத்தைப் பற்றியதல்ல என்பதை முதலில் மனங்கொள்ள வேண்டும். பெயர்வு, உருமாற்றம், அயன்மைப்பட்ட மாந்தர், காதல், மரணம், லண்டன், பம்பாய் ஆகியன பற்றியே எனது நூல் பேசுகின்றன. இதில் பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டுள்ள பகுதி ஒரு தீர்க்கதரிசியைப் பற்றியது. அவர் பெயர் முஹம்மத் அல்ல. அவர் வாழும் நகரம் நீர் பட்டதும் கரைகிறது. கற்பனைச் சீடர்கள் பலர் அவரைச் சூழ உள்ளனர். அவர்களுள் ஒருவன் எனது முதற்பெயரை (ஸல்மான்) தாங்கியுள்ளான்.

மேலும் இக்காட்சி முழுதும் கனவில் தோன்றுகிறது. கற்பனை மாந்தரின் கற்பனைக் கனவு. அக்கற்பனை மாந்தர் ஒரு நடிகராவர். மேலும் அவருக்கு மூளையும் கலங்கிவிட்டது – வரலாற்றிலிருந்து இதற்கு மேலும் விலகிச் செல்ல இயலுமா?

ஞானோதயம், உலகில் பெரும் சமயம் ஒன்றின் பிறப்பு ஆகியவை பற்றிய என் பார்வையை இக்கனவுக் காட்சியில் விளக்கியுள்ளேன். இஸ்லாமிய பண்பாட்டை மையமாகக் கொண்ட மதச்சார்பற்ற ஒருவனின் பார்வை இது. மதச்சார்பற்றது என்று கூறிக்கொள்ளும் நவீன இந்தியாவில் இத்தகைய கருப்பொருளை இலக்கியம் கையாளக்கூடாது என்று இந்திய நிதித்துறை கூறமுடியுமா?"

இவ்விவகாரம் தொடர்பாக முஸ்லிம் உலகில் இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. 'நூலாசிரியர் கண்டிக்கப்பட வேண்டும்; நூல் தடை செய்யப்பட வேண்டும்; முஸ்லிம்கள் இந்நூலை புறக்கணித்து ஒதுக்கிவிட வேண்டும்' என்பது ஒரு சாராரின் வாதம். 'இவை மட்டும்போதாது. முஸ்லிம்களது மதிப்புக்குரிய பெரியார்களைத் திட்டித் தீர்த்தவனைக் கொன்றொழிக்க வேண்டும்' என்பது மற்ற வாதம். இரண்டாவது வாதம், முதலில் ஈரானிலிருந்து கிளம்பியது அனைவரும் அறிந்ததே.

இங்கு இஸ்லாமிய ஷரீஆ அடிப்படையில் ஒரு கேள்வி எழுந்தது: ரித்தத்தை (மதம் மாறுதலை) ஏற்படுத்தும் சொல், எழுத்து என்பவற்றை ஒரு முஸ்லிம் வெளியிடுவது குற்றம். அச்சொல் - எழுத்து நேரடியாக இல்லாது மறைமுகமாக, கனவாக, பரிபாஷையாக, உருவகமாக, வெறுங் கற்பனையாக இருந்தால், முர்தத் (மதம் மாறியவர்) என்று தீர்ப்பு வழங்க முடியுமா? மேலும், 'மாஹவுண்ட்' என்ற கற்பனைத் தீர்க்கதரிசி பற்றி எழுதியிருப்பதால் இவ்விவகாரத்தில் ஸுன்னி, ஷியா அறிஞர்களின் விளக்கங்களில் வேறுபாடுண்டா?

பிரிட்டன் நாட்டு பள்ளி நிர்வாக சபைகளின் -இமாம்களின் ஏக தலைவர் ஸகி பதாவி அவர்கள் 'கார்டியனுக்கு' அளித்த பேட்டியில் - "அந்த நூல் முட்டாள்தனமானது என்றாலும் முன் விசாரணையின்றி எழுந்தமானமாக மரண தண்டனை விதிப்பதை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை,. (தி ஐலண்ட் 01.03.89) என்று தெரிவித்தார்.

'தெட்டத் தெளிவாகத் தெரியாத விஷயங்களைப் பொறுத்துத்தான் விசாரணை வேண்டும்; இந்த விஷயம் தெட்டத் தெளிவாக இருப்பதாலும் எழுத்தாளர் (உயிருடன்) இருப்பதாலும் விசாரணை தேவையில்லை' என்று சிலர் அழிவழக்காடலாம். ஆனல், தனது நூல் இஸ்லாமிய வரலாற்றிலிருந்து வெகு தூரமானது என்று அதன் தெட்டத் தெளிவின்மையைக் காட்டி ருஷ்தி மறுக்கிறார்.

இந்நூல் ஒரு சமயநூலோ வரலாற்று நூலோ அல்ல என்பது வெளிப்படையாகவே விளங்குகின்றது. இந்நிலையில் விசாரணை வேண்டுமா? வேண்டாமா? என்பது அடுத்த கேள்வி. அடுத்தது, சர்வதேச சட்டம் தொடர்பான பிரச்சினை. ஒரு வேற்று நாட்டுப் பிரஜைக்கு மற்றொரு நாட்டு அரசு தண்டனை விதிக்கலாமா? இதற்கு ஷரீஆ வில் நேரடியான பதில் இல்லாவிடின் பதில்கண்டாக வேண்டும்.

மத ஸ்தாபகர்களை, மதிப்புக்குரியவர்களை மறைமுகமாகவோ குறியீட்டு வடிவிலோ தூஷித்து எழுதுவதை எந்த சமயவாதியும் அனுமதிக்கப் போவதில்லை என்பது பொதுவான விஷயம். இங்கு மரண தண்டனை விவகாரத்தினல் தான் இவ்விடயம் தீர்க்கமாக ஆராயப்பட வேண்டியுள்ளது. இத்தகைய சலசலப்புகளின் போது அரசியற் கட்சிகள், தலைவர்கள், இயக்கங்கள் தமது நிலைப்பாட்டுக்குச் சாதகமாக இந்த விவகாரங்களைப் பயன்படுத்துவது பொதுவான வழக்கம். இது மார்க்க சம்பந்தமான சர்வதேச பத்வா (தீர்ப்பு) என்பதால் எத்தகைய குறுகிய நோக்கங்களும் இன்றி வெற்று உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல் நிதானமாக அணுகவேண்டியுள்ளது.

ஒரு சமூகத்தின் அல்லது மதபீடத்தின் விசுவாசத்துக்கு முரணாக—அரசு பீடத்துக்கு எதிராக ஒருவர் எழுதினல்—அதற்குரிய தண்டனை கொலை தான் என்றால், பல கேள்விகள் இங்கு எழ ஏதுவாகின்றது:

* கிறிஸ்தவத்தை அரச மதமாகக் கொண்ட நாடொன்றில் ஒரு முஸ்லிம், "யேசு கிறிஸ்து இறைவனின் குமாரனல்ல; அவர் ஒரு தூதரே" என்று எழு

(10ஆம் பக்கம் பார்க்க)

# வாசகர் கடிதங்களுக்கு இணை உண்டா என்ன?

சோவியத் ரஷ்யாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் புதிய சூழ்நிலைகளைத் தெளிவாகக் காட்டுகிறது 'க்ளாஸ்நாத்' (பகிரங்கமாக, வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தல்)! வெளிப்படையாகக் கருத்துக்களைத் தெரிவித்தால்தான் எதெல்லாம் நல்லது, எதெல்லாம் கெட்டது என்பதை மக்கள் புரிந்து கொள்ள முடியும். பிறகு நல்லதை வரவேற்க முடியும், கெட்ட விஷயங்களோடு போராட முடியும்.

உண்மை என்பது மிக முக்கியம் 'அதிக வெளிச்சம் தேவை!' என்றார் லெனின்,

இருட்டு மூலைகள் நமக்கு வேண்டியதில்லை. ஆகவே, வெளிச்சம் நன்கு பரவட்டும்!

இந்த பகிரங்கத் தன்மையை (க்ளாஸ்நாத்) மக்கள் இப்போது அனுபவித்து ரசிக்க ஆரம்பித்து விட்டார்கள். நாட்டில் நடக்கும் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மக்களுக்கு இயற்கையாகவே உள்ள ஆர்வம் மட்டுமே அவர்கள் 'க்ளாஸ்நாத்'தை வரவேற்பதற்குக் காரணம் என்று சொல்ல முடியாது. அரசாங்க இலாகாக்களின்மீது ஒரு கண்காணிப்பு வைக்கவும், தவறுகள் நிகழும்போது சுட்டிக் காட்டவும், தட்டிக் கேட்கவும் இந்த 'வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தல்' மிகத் தேவையானது என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்கள்.

இது தான் காரணம். முக்கியமாக, உண்மையை தெரிந்து கொள்வதும், உண்மையை எடுத்துச் சொல்வதும் மட்டும் போதாது. அதைத் தொடர்ந்து எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தாக வேண்டும்!

தற்போதும் நாட்டில் நிகழும் ஜனநாயக மாற்றங்களின் பிரதிபலிப்புகளைப் பத்திரிகைகளிலும், வெளியீடுகளிலும் நான் காண ஆரம்பிக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக நாளிதழ்கள், வாரப் பத்திரிகைகள், ரேடியோ, டெலிவிஷன் .. எல்லாமே புதிய விஷயங்களைப் புதிய கோணங்களில் கையாளத் தொடங்கியிருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும் போது ஏதோ இத்தனை காலமாக இறுகிப்போயிருந்த பனிக்கட்டி உருகுவதைப்போலத் தோன்றுகிறது!

குறிப்பாக, நம் பத்திரிகைகள் 'உபதேசங்க'ளைக் குறைத்துக்கொண்டு, உரையாடல்களையும் விவாதங்களையும் வெளியிட ஆரம்பித்திருப்பதே பெரிய விஷயம்! உயிரில்லாத, யாரும் படிக்காத கட்டுரைகளை வெளியிடுவதெல்லாம் குறைந்துவிட்டது. சுவையான சந்திப்புகள், போட்டிகள், சூடான

## கோர்பச்சேவ்

வாசகர் கடிதங்கள் எல்லாம் இடம்பெற ஆரம்பித்திருக்கின்றன. பத்திரிகைகள் இன்னும் நிறையப் பேருக்கு எழுத வாய்ப்புத் தரவேண்டும். நிரந்தரமாக எழுதிவரும் கட்டுரையாளர்களின் கருத்துக்களை நாம் படிக்கவேண்டியது அவசியம்தான். அதைவிடப் பொது மக்கள், தொழிலாளர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் இவர்களுடைய சந்திப்புகள், அனுபவங்கள் இதெல்லாம் ஒரு பத்திரிகைக்கு முக்கியம். பொதுமக்கள்தான் உயிருள்ள கருத்துக்களை வெளியே எடுத்துச் சென்று அவற்றைச் செயல்படுத்துகிறவர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

**ஏன்? வாசகர் கடிதங்களுக்கு இணை உண்டா என்ன? அவர்கள் எழுதும் கடிதங்களில் தான் எத்தனை அற்புதமான புதிய கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன!**

மொத்தத்தில் 'வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தல்' என்பது தேவைதானா, அது சோஷலிசத்துக்கு நல்லதுதானா போன்ற கேள்விகளே இனி எழத் தேவையில்லை. காற்று என்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் க்ளாஸ்நாத்! அதேசமயம், விமரிசனம் செய்யும்போது அதன் கூடவே 'பொறுப்பு' என்பதும் இருப்பதை நாம் மறந்துவிட முடியாது. விமரிசனம் கூர்மையாகக் கூர்மையாக அந்த அளவுக்குப் பொறுப்பும் அதிகரிக்கிறது. ஆகவே, கட்டுரையாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் மனச்சாட்சியோடும் பொறுப்பு உணர்ச்சியோடும் விமரிசனங்கள் செய்யவேண்டும். அதே சமயம் உண்மையை எழுதுவதற்கு யாருக்கும் அவர்கள் பயப்படத் தேவையில்லை.

பத்திரிகைகள் மேலும் மேலும் சக்திவாய்ந்தவையாக மாறவேண்டும் என்றே நான் விரும்புகிறேன். பதவியில் இருக்கும் சோம்பேறிகள், சுயலாபம் தேடுபவர்கள், சந்தர்ப்பவாதிகள், வாய்ச்சவடால் பேர்வழிகள்... இவர்கள் யாரையும் பத்திரிகைகள் தப்பிக்க விட்டுவிடக்கூடாது. அதே சமயம் மறுசீரமைப்புக்காக மனச்சுத்தியோடு உழைப்பவர்களைப் பத்திரிகைகள் பலவிதங்களில் உற்சாகப்படுத்தவேண்டும். மக்களை ஒன்றுபடுத்த வேண்டும். நல்ல காரியங்கள் நடக்க அணி திரட்ட வேண்டும்.

இனி வெளிப்படையாகக் கருத்துகள் தெரிவித்தல், சுயவிமரிசனங்கள் எல்லாம் சோவியத் வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கும் என்பது உறுதி. இவையில்லாமல் எந்த மாற்றமும் சாத்தியமில்லை. பகிரங்கத்தன்மை இல்லாலாமல் ஜனநாயகம் இல்லை. அதேபோல ஜனநாயகம் இல்லாமல் சோஷலிசமும் இல்லை!

**(பெரெஸ்ரொய்க்கா — ஒரு புதிய ரஷ்யப் புரட்சி என்ற நூலில்)**

நன்றி: ஜூனியர் விகடன் □

# அமெரிக்காவின் ஆயுதம் கொர்பச்சேவின் கையில்

## சுழலும் உலகில்

இன்று மிக முக்கியத்துவம் மிக்க உலகத் தலைவராகத் திகழ்ந்து வருபவர் கொர்பச்சேவ். உலகின் சகல வெகுஜன தொடர்பு சாதனங்களையும், அவர் ஒருங்குசேரத் தன்பால் ஈர்த்துள்ளார். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பு, உலகின் சகல வெகுஜன தொடர்பு சாதனங்களாலும் அதிக முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ள தலைவர், இவரே. "புன்னகை ராஜதந்திரி" என மேற்குலகத் தலைவரால் அழைக்கப்படும் இவர், மேற்குலக அரசியல்வாதிகளுக்குப் பெரும் தலையிடியாக உள்ளார். இவரின் ராஜதந்திர நடவடிக்கைகளின் முன் மேற்குலக ராஜதந்திரிகள், இன்று அசந்துபோயுள்ளனர். இவர் தனது ராஜதந்திர நடவடிக்கையில், பிரசாரத்தை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆயுதமாகக் கையாள்கிறார். உண்மையில் அதுஒரு பிரசார யுத்தமே (Propaganda Warfare).

"கொம்யூனிஸம் என்றால் ஒரு பயங்கரப் பூதம்", அது உலகை அச்சுறுத்தும் "பெரும் பிசாசு", அந்தப் "பயங்கரப் பிசாசின் தொட்டிலும் மையமும் சோவியத் யூனியன்", இன்றைய உலகில் முதற் கடமை, "அந்தப் பூதத்திலிருந்து உலகைப் பாதுகாப்பது தான்" என்றெல்லாம், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டு காலமாகப், பெரும் பிரச்சாரத்தில்

சர்வதேசி

தொடர்ந்து ஈடுபட்டுவந்தது. அது உண்மைக்கு மாறான, பெரும் சோடனைகள் மிக்க பிரச்சாரங்களை அவிழ்த்து விட்டது. தனது வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் உதவியால், வட்டத்தை சதுரமெனவும், வெள்ளையைக் கறுப்பு எனவும் நிரூபித்தது. உலகில் கொம்யூனிஸக் கருத்துக்களிற்கு எதிரான பலம் பொருந்திய ஆயுதமாக, இப்பிரச்சார நடவடிக்கைகள் இருந்தன.

இன்று கொர்பச்சேவின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகப் பிரச்சார யுத்தம் அமைந்துள்ளது. அமெரிக்காவின் அந்த முக்கிய பிரச்சார ஆயுதத்தை, மிகத் தந்திரோபாயமாக கொர்பச்சேவ் சின்னாபின்னமாக்கி வருகிறார்; இதற்கு ஈடுகொடுக்கமுடியாத நிலைக்கு, மேற்குலகம் இன்று தள்ளப்பட்டுள்ளது. கொர்பச்சேவின் சகல ராஜதந்திர நடவடிக்கைகளும், முழுமையாக மதிப்பீடு செய்யப்படவேண்டுமென்பது ஒருபுறமிருக்க, அவரின் பிரச்சார யுத்ததந்திரம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும், சற்று நோக்குவோம்.

சோவியத் அரசியல் வாதிகளை 'துருவக்கரடிகளாகச்' சித்திரித்து, யாரும் கிட்ட நெருங்கமுடியாத பயங்கர மிருகங்களாக மக்களின் முன் மேற்குலகம் படம் பிடித்துக் காட்டியது. முதலில் இத்தகைய கருத்துருவத்தை மேற்குலக மக்களின் மனங்களிலிருந்து அகற்றுவதை, தனது பிரதான நடவடிக்கையாக கொர்பச்சேவ் கொண்டார். இதன்பொருட்டு அவர் பல்வேறு நடவடிக்கைகளைக் கையாண்டார். இவற்றுள், சுவாரசியமான ஓர் உதாரணத்தை இங்கு நோக்குவோம்.

கடந்த வருடம், அமெரிக்காவிற்கு கொர்பச்சேவ் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளை, அவர் ஓர் அதிர்ச்சி வைத்தியத்தை சில நொடிக்குள் நடத்திக்காட்டினார். கொர்பச்சேவ் காரில் பவனிவந்து கொண்டிருந்த வேளை, அமெரிக்க மக்கள் வீதியின் இருபுறத்திலும் கொர்பச்சேவைப் பார்த்துக் கொண்டு நின்றனர். அப்போது கொர்பச்சேவ், தனது காரை நிறுத்துமாறு திடீரெனக் கூறினார். கொர்பச்சேவ் காரைவிட்டுக் கீழே இறங்கி வந்தார். வீதி ஓரத்தில் நின்ற மக்களை அணுகி அவர்களுடன் கைகுலுக்கினார்.

மக்கள் ஆனந்தத்தினால் மெய்மறந்து, "கொர்பச்சேவ் வாழ்க!" எனக் குரல் எழுப்பினர். அமெரிக்க அதிகாரிகளை இது அதிர வைத்ததுடன், அவர்களுக்கு பெரும் தர்மசங்கடமான நிலையையும் ஏற்படுத்தியது. அமெரிக்க ஜனாதிபதிகள், மக்கள் தம்மை நெருங்க முடியாத அளவிற்குத் தந்தக் கோபுரத்தில் வாழ்பவர்கள். பூதங்களெனவும் பிசாசுகள் எனவும் வர்ணிக்கப்படும் சோவியத் தலைவர்கள், உண்மையில் எப்படிச் சாமானிய மானவர்களாக இருக்கின்றனர் என்ற எண்ணத்தை, மக்கள் மனதில் வளர்க்கும் தரத்ததாக, இது காணப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு, விரும்பியோ விரும்பாமலோ அமெரிக்க வெகுஜன தொடர்பு சாதனங்கள், முக்கியத்துவம் கொடுத்திருந்தன. இது ஒரு மிகச் சிறிய, உளவியல் ரீதியான உதாரணமே.

"உலக சமாதானத்திற்குத் தடையாக சோவியத் உள்ளது" என்ற கருத்தை, உலக அரங்கில் அமெரிக்கா வளர்த்திருந்தது. தனது கேவலம் மிகுந்த ஆயுதத் தயாரிப்புக்களுக்கெல்லாம் "சோவியத் அபாயம்" என்ற பூச்சாண்டியை எப்பொழுதும் அமெரிக்கா காட்டி வந்தது. அமெரிக்காவினால் கட்டி வளர்க்கப்பட்டிருந்த அந்தப் பொய் மலையை, கொர்பச்சேவ் மிக நுணுக்கமாகத் தகர்த்தார். சமாதானத்திற்கான அறிவிப்புக்களை தானே முன்வந்து, ஒருதலைப் பட்சமாக அறிவிக்கத் தொடங்கினார். அணுவாயுதக் குறைப்பு, படைக் குறைப்பு, படைவிலகல் போன்ற அறிவித்தல்களை முதலில் வெளியிடத் தொடங்கினார். ஆனால் கொர்பச்சேவ் பொய்யாக அறிவிக்கிறார் என்றே, அதுபற்றிக் கூறப்பட்டது. ஆனால் தனது அறிவிப்புக்களை விட்ட சிறிது காலத்தின் பின்னர், சிலவற்றை அவர், ஒருதலைப் பட்சமாக அமுல்படுத்தத் தொடங்கினார். இதனால் கொர்பச்சேவ் சொல்லுவது பொய்யல்ல என்ற கருத்தை தோற்றுவித்ததுடன், சொல்வதை எல்லாம் அவர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையையும், மேற்குலக மக்கள் மனதில் ஏற்படுத்துவதாக அமைந்தது. தமது நாட்டின் தலைவர்களையும் மீறி, கொர்பச்சேவ்ன் மீது மேற்குலக மக்கள் நம்பிக்கை கொள்ளும் நிலையை இது தோற்றுவித்தது. மேற்குலக அரசியற் தலைவர்களுக்கு இது பெரும் தலையிடியைக் கொடுத்தது.

மொத்தத்தில் கொர்பச்சேவின் அரசியல், தந்திரோபாய நடவடிக்கைகள் பற்றிய — மொத்த விளைவு பற்றிய — மதிப்பீடு ஒரு புறமிருக்க, பிரச்சார ரீதியில் அவர் மிகப் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளார் என்பது, நூற்றுக்கு நூறு உண்மை.

கொர்பச்சேவின் பிரச்சார யுத்தத்திற்கு முன்னால், அமெரிக்காவும் அதன் அணியினரும் இன்று திணறிப் போயுள்ளனர். இன்று மேற்குலகத்தவர் கொர்பச்சேவை, "புன்னகை ராஜ தந்திரி" என்று மிக எரிச்சலுடன் அழைக்கின்றனர். அமெரிக்காவின் பிரச்சார ஆயுதம், இன்று கொர்பச்சேவின் கையில் வீழ்ந்து விட்டது. □

---

## ஸல்மான் ருஷ்தி...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

துவது அந்நாட்டு மத நம்பிக்கைக்கு நேர்முரணானது. எனவே அது தேவ தூஷணையாகும். இந்நிலையில், அந்த முஸ்லிமுக்கு மரண தண்டனை விதிக்க நேரிடலாம் அல்லவா ?

* அபூபக்கர் (றழி), உமர் (றழி), உஸ்மான் (றழி), ஆயிஷா (றழி) போன்றோரை, ஷியா இமாம்கள் திட்டி எழுதுவதாக ஸுன்னி அறிஞர்கள் இன்றும் கூறுகின்றனர். இத்தகைய கருத்து, ஸுன்னி முஸ்லிம்களின் பார்வையில் மதவிரோதமாகும். எனவே, இத்தகையோருக்கு மரண தண்டனை விதிப்பதா ?

* மறுதலையாக அரச பீடம், மதபீடம் என்பவற்றின் வெறுப்பைச் சம்பாதிக்கும் நேர்மையான சிந்தனையாளர்களுக்கும் இதே தீர்ப்பு விதிக்கப்படலாம். இதற்கு உலக வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. நஞ்சூட்டப்பட்ட சோக்ரடீஸ், மத்திய கால திருச்சபைகளால் தண்டிக்கப்பட்ட விஞ்ஞானிகள், சிறைத்தண்டனை பெற்ற இஸ்லாமிய மேதைகளான இப்னு தைமியா, அஹ்மத் இப்னு ஹன்பல் போன்றோருக்கு நேர்ந்த கதியை இன்றைய ஜனநாயக உலகு மிலேச்சச் செயல் என்று கண்டிக்கின்றது. ஆனால், அன்றைய கண்ணோட்டத்தில் அது மதவிரோதம், சமூகத் துரோகம்.

ஸல்மான் ருஷ்தியை மேலே காட்டிய மேதைகளோடு நான் ஒப்பிட்டதாக யாரும் தவறாகப் புரிந்து கொள்ளத் தேவையில்லை. இங்கு, நேர்மையான சிந்தனையாளர்களையும் இதே தண்டனைக்குட்படுத்த பிற்போக்கு அரசபீடங்களும் சனாதன மதபீடங்களும் ஒரு வழியாகப் பின்பற்றக்கூடும் என்பதே வாதமாகும்.

அடுத்த கேள்வி, ஷரீஆவின்படி ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் (தீர்ப்பிட்டவரின் கண்காணிப்பின்றி) எவரும் நிறைவேற்றலாமா ?

இக்கேள்வி எழக் காரணம், மரண தண்டனைத் தீர்ப்பு சரியோ தவறோ உணர்ச்சி வசப்பட்ட மக்கள் ஸல்மான் ருஷ்தியின் குடும்பத்தையே அழித்துவிடக்கூடும். அவரது சொத்துக்களையும் நாசப்படுத்தக் கூடும். "மத விரோதமிக்க காடைத் தனமான எழுத்தாளரை"ப் பொறுத்த வரை இவ்வாறு தான் நாசமாக்க வேண்டும் என்று எமது உணர்ச்சி சொன்னாலும், உலகக் கண்ணோட்டத்தில் இது பயங்கரவாதமாகும். மிருகமொன்றை அறுப்பதில்கூட பல நிபந்தனைகளை விதித்துள்ள இஸ்லாமிய ஷரீஆ, ஒரு மனிதனுக்கு விதிக்கும் கொலைத் தண்டனையை "கூலி கொடுத்து" திறந்துவிட அனுமதிக்கிறதா ?

ஈரானின் உத்தரவை இஸ்லாமிய ஷரீஆ வின் தீர்ப்பாக சிலர் கருதுகின்ற நிலையிலேயே இந்த வினா இங்கு எழுகின்றது. இச்சந்தர்ப்பத்தில், இந்திய 'ஜமாஅத்தே இஸ்லாமி' யின் மாத ஏடான 'சமரசம்' (1 - 15 மார்ச் 89) தீட்டியுள்ள காத்திரமான ஆசிரியர் தலையங்கம் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

"இந்தக் கொடூரமான குற்றத்துக்காக ருஷ்தி மிகக் கடுமையான தண்டனைக்குரியவரே ...! அதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆயினும், இந்தப் பிரச்சினை குறித்து 'குற்றவாளியை எங்கே கண்டாலும் கொல்லுங்கள்' என்று இமாம் கொமெய்னி வெளியிட்டுள்ள அறிக்கை முறையற்றதாகும். சல்மான் ருஷ்தி தண்டனைக்குரியவர் தான் என்றாலும் அத்தண்டனையை நிறைவேற்றும் அதிகாரம், உரிமை தனிநபர்களுக்கு இல்லை. ஒரு இஸ்லாமிய நீதி மன்றத்தில் குற்றவாளி ஆஜர்படுத்தப்படவேண்டும். நீதி மன்றம் அவரை முறைப்படி விசாரிக்கும் ..... .. ......... சர்வதேச உறவு முறைகள் — ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு 'குற்றவாளியை எங்கே கண்டாலும், கொல்லுங்கள்' எனக்கூறி தனிநபர்களின் கையில் சட்டத்தைத் தூக்கிக் கொடுத்திருப்பது முறையற்றதாகும். இத்தகைய கொந்தளிப்பான சூழ்நிலைகளில் இந்திய முஸ்லிம்கள் பொறுமையையும், நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்! உணர்ச்சி வசப்பட்டு போராட்டம், கதவடைப்பு என்று ஈடுபட்டு நிலைமையை இன்னும் சிக்கலாக்கி விடக்கூடாது !"

எது எவ்வாறிருந்தாலும், ஸல்மான் ருஷ்தி விவகாரம் தொடர்பான கண்டனங்கள், உலக முஸ்லிம்களது சமயப் பற்றுக்கும் நபி (ஸல்) அவர்கள் மீதுள்ள அபிமானத்துக்கும் நல்லதோர் எடுத்துக் காட்டாகும். பேனாவைக் கண்டவாறு பிரயோகிக்கும் தான்தோன்றித் தனமான எழுத்தாளர்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் நல்லதொரு பாடமாக அமையட்டும். □

---

## 1949ஆம் ஆண்டு, எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியது

"தமிழ்ப் பொதுமக்கள் என்றுமே தமது இலக்கினின்றும் பிறழவில்லை. வருங்காலத்திலும் அவர்கள் தமது இலக்கினின்றும் தவறமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது"

"இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கெல்லாம் தங்களுடைய இன்றைய அரசியல் நிலையைப் பற்றியும் எதிர்கால நிலை பற்றியும் ஒரு நிலையான கொள்கை உண்டு என்று விளங்குகிறது. அவர்களுக்கு ஒரு நிலையான குறிக்கோள் உண்டு. சுருக்கமாகக் கூறினால் அவர்களுக்குத் தாங்கள் ஒரு தனித்தேசிய இனம் என்ற உணர்ச்சி உண்டு." □

# நிகழ்வுகள்

## 5-4-89 புதன்

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த கொன்ஸ்ரபிள் ஒருவர், தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்தார். காரணம் தெரியவில்லை□ மிருசுவில், உசன் பகுதிகள் இன்றும் சுற்றிவளைக்கப்பட்டுத், தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன□ஜே.வி.பி. இயக்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து தென்னிலங்கையில் நடந்த ஹர்த்தால், பூரண வெற்றி எனத் தெரிகிறது□ கொடிகாமத்தைச் சேர்ந்த பஸ் நடத்துனர் (வயது 30) யாழ். நாவலர் வீதியில் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார்□ றுஹுணு பல்கலைக் கழக மாணவர் 10 பேரைக் காணவில்லை யென, உப வேந்தர் சிறிநல் ரணவெல தெரிவித்தார்□ பருத்தித்துறைப் பகுதி அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டுத், தேடுதல் மேற்கொள்ளப்பட்டது□ மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியைத் தரமுயர்த்த வேண்டுமென, ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்□

## 6-4-89 வியாழன்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டனைக்குட்பட்டுச் சிறைவாசம் அனுபவித்த 13 பேர், ஈரோஸின் வேண்டுகோளையடுத்து, மகஸின் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்□ சிங்கள சினிமாத்துறையில் தமிழர்களின் ஈடுபாடு இருந்தபோது முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது; சிங்களவர் மயமாக்கப்பட்டபின் அந்த நிலை இல்லையென, பிரதி சபாநாயகரும்–நடிகருமான காமினி பொன்சேகா நாடாளுமன்றத்தில் கூறினார் □யாழ்ப்பாண வங்கிகளில் இன்று மீண்டும் பணப்புழக்கம் தொடங்கியது□ ஒலுமடுவுக்குச் சமீபமாக, இந்தியப் படை வாகனம் மீது சிலிண்டர்த் தாக்குதல் நிகழ்ந்ததில், 18 பேர் இறந்தனர்□ இந்திய வெளியுறவு அதிகாரி குல்தீப் சகாதேவ் திடீரெனக் கொழும்பு வந்தார்□

## 7-4-89 வெள்ளி

ஹங்கமவில் நடந்த கண்ணி வெடி விபத்தில் 4 பொலிசாரும், லுணுஹம்வகரவில் ஆறு பொலிசாரும் கொல்லப்பட்டனர்□ தேசப்பிரேமி சகோதரர்களின் கொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்து கண்டியில் சத்தியாக்கிரகம் செய்த பிக்குகளை, பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்□ யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் ஏ. இராமநாதன் சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலைப் புலிகள் இதற்கு உரிமை கோரியுள்ளனர்□ பண்டிகை முற்பணம், சென்ற மாதச் சம்பளம் என்பன வழங்கப்படாததைக் கண்டித்து, பள்ளேகட்டுவ தோட்டத்தைச் சேர்ந்த 600தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்□ அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். இல்லையேல் ஈழக்கோரிக்கையின் தர்க்க நியாயம் மீண்டும் பொருத்தமுள்ளதாகி விடும் என, இந்தியத்தூதர் தீக்ஷித், தனது பிரியாவிடைவைபவத்தில் கூறினார்□

## 8-4-89 சனி

மாலை 5.30 மணியளவில், யாழ். இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக, 42 வயதான ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்□ பருத்தித்துறை வீ. எம். வீதியைச் சேர்ந்த மக்கள், அவசரமாகத் தமது வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர். அமைதிப் படையின் அறிவிப்பினைத் தொடர்ந்தே, இவ்வாறு வெளியேறுகின்றனர்□ கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து, ஒலுமடுப் பகுதி அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டுத், தேடுதல் நடவடிக்கைகளுக் குள்ளாக்கப்பட்டது□ ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் பிரச்சினையின் அடிப்படையைத் தீர்க்காது என, ம. ஐ. மு. தலைவர் தினேஷ் குணவர்த்தன கூறினார் □ எழுத்தாளர் 'துருவன்' 45 ஆவது வயதில் காலமானார்□ ஊர்காவற்றுறையில் அமைதிப் படைவீரர் இருவரும் இரண்டு இளைஞர்களும் இறந்தனர்□

## 9-4-89 ஞாயிறு

தென்னிலங்கையில் 96 தீவிரவாதிகள் சரணடைந்துள்ளதாக, அரசப் பேச்சாளர் சொன்னார்□ பருத்தித்துறைப் பகுதியில், காலை தேடுதல் நடந்தது□ யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த ஒரு இளைஞர், வார்ட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்□ பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகாவுடன், ஈழவர் ஜனநாயக முன்னணியின் தூதுக்குழுவினர், 6 மணித்தியாலங்களாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்□

## 10-4-89 திங்கள்

கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் பிக்குகள் தாக்கப்பட்டது பற்றி விசாரணைகள் நடைபெற்று வருகின்றதென, பிரதமர் கூறினார்□ பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டுமென, அனைத்துப் பல்கலைக் கழகப் பிக்குமார் சம்மேளனம், கோரிக்கை விடுத்துள்ளது□

# கிரிக்கற்

## மகாஜனா எதிர் மத்திய கல்லூரி

மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 94 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்து ஆடிய மகாஜனா அணி 147 ஓட்டங்களைப் பெற்றது. சிராஜன் 35 ஓட்டங்களையும், ராஜீவன் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

மத்திய கல்லூரி தனது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கற்றுக்களுக்கு 128 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டம் முடிவுற்றது.

அணித் தலைவர் ரமேஷ் 41 ஓட்டங்களையும், சதீஸ் காந்தன் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

## சென். ஜோண்ஸ் கல்லூரி எதிர் மகாஜனா

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனா அணி 69 ஓவர்களை முகங்கொடுத்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடிய சென். ஜோண்ஸ் அணி 157 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

மகாஜனா தனது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கற் இழப்பிற்கு 54 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டம் முடிவுற்றது.

## யூனியன் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்து

மானிப்பாய் இந்துக்கல்லூரி 185 ஓட்டங்களுக்கு முதலில் ஆட்டமிழந்தது. பாஸ்கரன் 59 ஓட்டங்களையும் ஜெயகாந்தன் 26 ஓட்டங்களையும், ஸ்ரீகுமார் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

யூனியன் கல்லூரி 129 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பத்து...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகளை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்ய முடியும் என்ற பெரும் நம்பிக்கையுடன், மலையக மக்கள் ஆவலோடு இருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பட்டியலில் இ.தொ.கா தனது 7 வேட்பாளர்களை மலையகத்தில் நிறுத்தியது. எனினும் வேட்பாளர் மனு தாக்கல் செய்த தினத்தன்று இ.தொ.கா தலவாக்கொல்லை அமைப்பாளர் திரு.பி. சந்திரசேகரன் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (ஜ.ம.வி,மு) மூலம் போட்டியிட முன் வந்தார். இது இலங்கை தொழிலாளர் கொங்கிரஸ் தலைமைத்துவத்திற்கு பேரிடியைக் கொடுத்தது. தேர்தல் அண்மித்த வேளையில் கொங்கிரஸ் சார்பான வேட்பாளருக்கு 2 வாக்குகளையும், ஐ.தே.க. வேட்பாளருக்கு 1 வாக்கையும் பரஸ்ரப் புரிந்துணர்வுடனை அடிப்படையில் அளிக்குமாறு தொண்டமான் நுவரெலிய மாவட்ட தமிழ் வாக்காளருக்கு வேண்டுகோள் விடுத்தார் ஆனல் நடந்ததென்ன? இ,தொ.கொ; வின் தந்திரோபாயம், இ.தொ.கொ.வுக்கு பெருந் தீங்கை கொண்டு வந்தது. இது முன்னரெப்போதும் இல்லாதவாறு திரு. காமினி திஸாநாயக்கவுக்கு அதிகப்படியான வாக்குகளை பெற்றுத்தர உதவியது.

எல்லா இ.தொ.கொ. வேட்பாளர்களும் மலையகத்தில் தோல்வி கண்டனர். இ.தொ.கொ.வின் பழம் பெருந் தொழிற் சங்கவாதியான திரு. வி. அண்ணாமலை கூட படுதோல்வியுற்றார். இ.தொ, கொ.வின் உள்ளேயே கசப்பு மனப்பான்மையுடன் இருந்த சக்திகள், இ.தொ.கொ.வின் தேர்தல் பிரச்சாரத்தில் உண்மையான ஈடுபாட்டை காட்டாது இருந்தன. மறுபுறம் சந்திர சேகரன் இ.தொ.கொ. வேட்பாளர்களுக்கு சேரவேண்டிய வாக்குகளில் கணிசமான அளவு வாக்குகளை தம் பக்கம் திருப்பிக்கொண்டார். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி 10,500 வாக்குகளை இத் தேர்தலில் பெற்றது. ஐக்கிய சோசலிச முன்னணி தமிழ் வேட்பாளர்கள் சுமார் 3000 வாக்குகளைப் பெற்றனர், ஆனல் எவரும் வெற்றி பெறவில்லை. இவர்கள் ஒன்றுபட்டு தேர்தலில் பங்கு பற்றியிருந்திருந்தால் நிச்சயமாக ஆகக் குறைந்தது ஒரு ஆசனத்தையாவது கைப்பற்றியிருக்கலாம். கடந்த வருடம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின் போதே ஐக்கிய சோசலிச முன்னணியின் மூலம் இரு மலையகத் தமிழர் வெற்றி பெற்றதால் மலையகத்தில் இ.தொ. கொ. கொண்டிருந்த ஏகபோக நிலையில் சிதறல் தோன்றியது.

கொங்கிரஸ் மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தவறியதும், இ.தொ, கொ. தனித்துவத்தைக் கைவிட்டு முழுமையாக இ.தே.க. வுடன் ஒட்டிக்கொண்டதுமே இ. தொ. கொ.வின் தோல்விக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

இப்போது மலையகத் தமிழ் மக்கள் குறிப்பாக இளைஞர்கள், தோட்டங்களில் நிலவும் இழிவான நிலையிலிருந்து விடுதலை பெறத் துடிக்கின்றனர். இதுவே மலையகத்தின் யதார்த்த நிலை. எனவேதான் மலையக மக்கள் விடுதலை பெற வழி வகுக்கும் தலைமைத்துவத்திற்கு மட்டுமே மலையகத்தில் இன்று நிலை கொள்ள இடமுண்டு. □

## கம்ப்யூட்டர்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

*பாடும் மனிதன் அவனது நண்பர்களை*
*சந்தோஷப்படுத்துபவன். ஆனல், ஓதுபவன்*
*அவன் சகமனிதர்களை சந்தோஷப்படுத்துபவன்*
*அல்ல.*

---

*முகத்தை வெட்டுங்கள். முகத்தோற்றத்தை*
*வெட்டுங்கள்.*
*வானம் பூமியோடு கலக்குமாறு*
*தோற்றங்களை 'மீண்டும் உருவாக்குங்கள்.*
*அப்போது சின்ன மனிதர்கள் வீழ்வார்கள்.*

---

*இரும்பிற்கும் மேலாக கரிக்கும் மேலாக*
*தங்கத்திற்கும் மேலாக எனக்கு மின்சாரம் தேவை.*
*ஆட்டிறைச்சிக்கும் மேலாக. பன்றி இறைச்சிக்கும்*
*மேலாக.*
*கீரைக்கும் மேலாக, வெள்ளரிக்கும் மேலாக அது*
*எனக்குத் தேவை. எனது கனவுகளுக்காக அது தேவை.*

கவிதைகள் மொழிபெயர்ப்பு.
அச்சுதன் அடுக்கா
நன்றி: புதுயுகம் பிறக்கிறது.

### அட்டவணை : 3

| ஆண்டு | மருத்துவம் | | பொறியியல் | |
|---|---|---|---|---|
| | சிங்கள மொழி மாணவர் | தமிழ் மொழி மாணவர் | சிங்கள மொழி மாணவர் | தமிழ் மொழி மாணவர் |
| 1969 | 50% | 50% | 51.7% | 48.3% |
| 1970 | 57% | 43% | 56% | 44% |
| 1972 | 58.6% | 41.4% | 66.7% | 33.3% |
| 1973 | 62% | 38% | 75.4% | 26.6% |
| 1974 | 72.7% | 27.3% | 81.5% | 18.5% |
| 1977 | 72% | 28% | 81% | 19% |
| 1978 | 57.5% | 42.5% | 64% | 36% |
| 1979 | 67.4% | 32.6% | 61.8% | 33.2% |
| 1981 | 80.7% | 19,3% | 69.8% | 30.2% |

திசை
THISAI

15 - 4 - 89 சனிக்கிழமை வெளிவர வேண்டிய எமது பத்திரிகை தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு 13-4-89 வியாழக்கிழமை வெளிவருகிறது என்பதை அறியத்தருகிறோம்.

# வறுமை ஒழிப்புத் திட்டம் - யார் பயனடைவர்?

*வறுமை ஒழிப்புத் திட்டத்தின் செயலாளரான சுசில் சிறிவர்த்தனு அவர்கள் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் நடைமுறைகள் பற்றி தந்துள்ள விபரங்கள் சில கீழே தரப்படுகின்றன.*

1. வறுமை ஒழிப்புத்திட்டத்துக்கு, ஐந்து பேரையோ அதற்கு மேற்பட்ட தொகையினரைக் கொண்ட குடும்பம் மட்டுமே தகுதியுடையதாகச் சொல்லப்படும் வதந்தி பொய்யானதே. ஒரு குடும்பம் என்பது ஒருவரைக் கொண்டதாக இருந்தாலும் அக்குடும்பம் இதற்குத் தகுதியுடையதாகவே கொள்ளப்படும். அதாவது எந்தக் குடும்பமாயினும் 700/= ரூபா மாத வருமானத்துக்கு கீழ்ப்பட்டதாக இருந்தால் அது இதற்கு தகுதியுடையதே.

2. வறுமை ஒழிப்புத்திட்டத்தில் இடம் பெறுவோருக்கு வறுமை ஒழிப்பு அட்டை ஒன்று வழங்கப்படும். அவர் அந்த அட்டையின் உதவியோடு ரூபா 1458/=க்குப் பெறுமதியான பொருட்களை கூட்டுறவுக் கடைகளிலோ இதற்குத் தகுதிபெற்ற கடைகளிலோ பெற்றுக்கொள்ளலாம். மிகுதி ரூபா 1042/= இவரது சேமிப்பு கணக்கில் வைக்கப்படும். இவர் காசைக் கையாள அனுமதிக்கப்படமாட்டார்.

3. 24 மாதங்களுக்கு மட்டுமே இந்த உதவி கிடைக்கும். எக்காரணம் கொண்டும் இதற்குமேல் நீடிக்கப்படமாட்டாது. ஆனல் யாராவது இக்கால எல்லைக்குள் தனது திறமையால் ஏதாவது கைத்தொழில் முயற்சியை திறம்பட செய்யத் தொடங்கியிருந்தால் அவருக்கு இரண்டு வருட எல்லைக்கு முன்னரே அவரது சேமிப்பில் இருந்து பணம் பெறும் தகுதி வழங்கப்படும்.

4. வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு தகுதியுடையவர்களைத் தெரிவுசெய்வதில் எந்தவித சிக்கலும் ஏற்படப் போவதில்லை. உணவு முத்திரை வழங்கலில் உள்ள சிக்கல் இதில் நிகழமாட்டாது. காரணம் இது பகிரங்கமான முறையில் செயற்படவிருக்கும் ஒன்ருகும். அதாவது இதற்குத் தகுதியானவர்கள் எனப்படுவோர் அவர்கள் வாழும் அவ்வவ்வட்டாரத்துக்குரிய மக்களாலேயே தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கென தெரிவு செய்யப்பட்ட ஆண்களும் பெண்களுமாக 150,000 பேர் ப0,000 கிராமங்களில் இயங்குவர்.

# வெலி ஓயா குடியேற்றம் அரசினல் அம்பலம்

வன்னிப்பகுதியில் மணலாறு பகுதியில் 'வெலிஓயா' என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களை அரசு மேற்கொண்டு வருவதாக, தமிழர் அமைப்புகள் முன்பே குற்றஞ் சாட்டி வந்தபோதும், அரசு அதை மறுத்து வந்தமை தெரிந்ததே.

அண்மையில் 'வன்முறை,சதிநாசச் செயல்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கான ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்பில் அரசாங்கம் வெளியிட்டுள்ள விளம்பர மொன்றில் 'வெலிஓயா மாவட்டம்' என வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தமிழர் அமைப்புகளின் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது.

''வன்னிப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட எல்லைப் புறத்தில் வெலிஓயா என்ற ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா? அப்படியானல் அந்த மாவட்டத்தின் எல்லைகள் என்ன? எப்போது உருவாக்கப்பட்டது''? என்று த. வி. கூ. எம்.பி. அ. அமிர்தலிங்கம், நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்க முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

''வட மாகாணத்தில் கிளிநோச்சி, மன்னர், வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களே உண்டு. வெலிஓயா என்ற பெயரில் ஒரு மாவட்டம் இல்லை. மத்திய அரசு இப்படி விஷமத்தனமான காரியங்களில் ஈடுபடுவது தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்துவதாகும்'' என்று வட--கிழக்கு மாகாண முதல்வர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

''தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசமான 'மணல் ஆறு' பகுதிக்கு வெலி ஓயா என்னும் புதிய பெயர் சூட்டப்பட்டு சிங்களக் குடியேற்றம் தொடர்கிறது. வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து 75 ஆயிரம் நிலப்பகுதி இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது.'' என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பி. பி. சி. யில் வேலை நிறுத்த அச்சுறுத்தல்.

வானெலி, தொலைக்காட்சி நிறுவனங்களின் நிர்வாகத்துக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் செவ்வாய்க் கிழமை நடந்த பேச்சு வார்த்தை முறிவடைந்தது. இதனல் பி.பி.சி.யில் வேலை செய்யும் பத்திரிகையாளரும், தொழில்நுட்பவியலாளரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடிய சாத்தியக்கூறு நிலவுகிறது.

பி. பி. சி. 7 சதவீத சம்பள உயர்வைத் தருவதாகக் கூறுகிறது. ஆனல் தொழிற் சங்கங்கள் 16 சதவீத சம்பள உயர்வைக் சேட்கின்றனர்.

## ஈழத்தமிழ்...,

(1ஆம் பச்கத்தொடர்ச்சி)

2. தெற்கிலுள்ள ஜே. வி. பி. யினர் அரசாங்கத்தின் இடைக்கால யுத்த நிறுத்தத்தை தம்மை ஏமாற்றுவதற்குக் கையாளும் வெறும்கண்துடைப்பாகவே கருதி நிராகரித்துள்ளனர். ஆனல் ஜே. வி. பி. யினரின் போக்கோடு வடக்கு-கிழக்கு போராட்ட அமைப்புகளை மாருட்டம் செய்யக் கூடாது. ஈழவர் ஜன நாயக முன்னணி எல்.ரி.ரி ஈ.இன்னும் ஏனைய அமைப்புக்கள் வெகு நாட்களுக்கு முன்னரே நிபந்தனையற்ற யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய அமைதிப்படைக்கு வேண்டுகோள் விடுத்த வண்ணமே இருந்துள்ளன. இதிலிருந்து தமிழ்ப்பகுதிகளில் அமைதியை ஏற்படுத்தும் பொறுப்பு இந்திய அமைதிப் படையின் கையிலேயே தங்கியுள்ளது.

3. தமிழ்பேசும் மக்கள் எதிர்பார்க்கும் இந்த அமைதியை அமைதிப்படை கொண்டு வரும் முயற்சியில் இறங்குமா? இதற்குரிய பதிலை, இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு பிரச்சனைகளின் தீவிரத் தன்மைகளை நாடிபிடிப்பதிலிருந்தே அறியலாம். உள்நாட்டில் வெகுவிரைவில் வரவிருக்கும் தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிய பிரச்சனை ஆளுங் கட்சிக்குண்டு. ஈழத்தமிழருக்குச் சார்பாக நிற்கும் தி.மு.க. பிரச்சனை, போபஸ் ஆயுத விற்பனை பிரச்சனை, இந்திராகாந்தி-தக்கார் கொமிஷன் பிரச்சனை, சீக்கியர் பிரச்சனை-இவற்றின் ஒட்டைகளைப் புட்டுக் காட்டி அணிதிரண்டுள்ள எதிர்கட்சிகளின் தேசிய கூட்டணி என்பவை உள்நாட்டில் விஸ்வரூபங்கொள்ள, வெளிநாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சனை, மாலைதீவுப் பிரச்சனை, பாகிஸ்தான் பிரச்சனை என்பவற்ருேடு அண்மையில் வெடித்துள்ள .நேபாளப் பிரச்சனை இந்தியாவை மிகவும் சிக்கலுக்குள் ஆழ்த்தியுள்ளது. இந்தியா ஏகாதிபத்திய போக்குடையதாக மாறிவருவதாக, பல மட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இவற்றிலிருந்து மீள்வதற்கு இந்தியா வெகுவிரைவில் இலங்கைத்தமிழர் பிரச்சனையில் புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

## கிரிக்கற்..

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரமணன் 40, மோகன் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

மானிப்பாய் இந்து தனது இரண்டாவது இனிங்ஸில் 5விக்கற் இழப்பிற்கு 53 ஓட்டங்களைப் பெற்றவுடன், யூனியன் கல்லூரியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

யூனியன் கல்லூரி வெற்றி பெறுவதற்கு 110 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் 2 விக்கற் இழப்பிற்கு 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டம் முடிவுற்றது.

## யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யூனியன்

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 146 ஓட்டங்களைப் பெற்றது. ஜனர்தனன் 48 ஓட்டங்களையும்' விநோதன் 27 ஓட்டங்களையும் செந்தில் குமரன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலளித்து ஆடிய யூனியன் கல்லூரி 8 விக்கற் இழப்பிற்கு 211 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

யாழ்ப்பாணக்கல்லூரி தனது இரண்டாவது இனிங்ஸில் 1 விக்கற் இழப்பிற்கு 62 ஓட்டங்களைப் பெற்றது.

— எம். பாலா

## தமிழர்....

(12ஆம் பக்கம் பார்க்க)

செல்ல முடியாது என அறிவிக்கப்பட்டது.

பின்னர் அது தவருன செய்தி என்றும் F.E.B. இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பு பெற்று செல்வோருக்கு உதவி வழங்கும் முகமாகவே செயற்படும் என இப்போது செய்திகள் கூறுகின்றன.

தொடர்ந்து பல வருடங்களாக அடிக்கப் பட்டு, வேட்டையாடப்பட்டு, வெளிநாடுகளுக்கு சென்று தமது விமோசனத்தினை தேடவிளையும் தமிழ் இளைஞர்களை, தொடர்ந்து வெளிநாடுகளுக்கு குறிப்பாக மத்திய கிழக்கிற்கு செல்லத் தடுக்கும் முயற்சியா என தமிழ் இளைஞர்கள் மத்தியில் சந்தேகம் தோன்றியுள்ளது.

## ஆறுவது திருத்தம் நீக்கப்படுமா?

ஐ. தே. க. உருவாக்கிய அரசியல் அமைப்பு 11 வருடங்களில் 16 தடவை திருத்தப்பட்டது.

ஈழவர் ஜனநாயக முன்னணி, 6-வது திருத்தம் ரத்து செய்யப்படாவிட்டால் தனது உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்ல மாட்டார்கள் என, உறுதியாகக்கூறியுள்ளது.

புதிய ஜனதிபதி இந்த 6-வது திருத்தத்தை தனிப்பட்ட முறையில் நீக்குவதற்கு விரும்பினலும் அவரது கட்சியினர் உடன்படுவார்களா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

அவருக்கு ''வில்லங்கம்'' கொடுப்பதற்காகவே சில சிரேஷ்ட அமைச்சர்கள் இத்திருத்தத்தை ரத்து செய்யக் கூடாதெனபோர் தொடுக்கக் கூடும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த 6 வது திருத்தத்தின் மூலந்தான், தமிழர் விடுதலைக் கூட்டணியினரை பழைய ஜனதிபதி நாடாளுமன்றத்து புகவிடாது தடுத்தார்.

இந்த 6வது திருத்தத்தை ரத்து செய்வதென்றல் அப்பிரேரணையை 3/2 பெரும்பான்மை மூலந்தான் செய்யலாம்

ஐ. தே. க விற்கு 125 உறுப்பினர்கள் உள்ளனர். இத்திருத்தத்தை ரத்து செய்வதற்கு வேண்டியதொகை 150 ஆகும், ஈழவர் ஐக்கிய முன்னணி த. வி. கூட்டணி, முஸ்லிம் கொங்கிரஸ், சில இடதுசாரி உறுப்பினர்கள் இந்த 6வது திருத்தத்தை ரத்து செய்வதற்கு ஆதரவு அளிப்பார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. ஐ. தே. க. செய்யுமா?

## மங்களம், மங்களமே!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில், ஒலிபரப்பு நிகழ்ச்சி ஆரம்பத்திலும் முடிவிலும் சிங்களத்தில், மங்களம் இசைக்கின்றனர்.

தமிழ் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்ட பின்னரும், தமிழர் சிங்களத்தில் தான் மங்களம் கேட்கவேண்டுமா?

புதிய ஜனதிபதி தனது உரையின் தமிழாக்கத்தினை உடனடியாகாவே ஒலிபரப்பும் போது, ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் இன்னுமேன் இத்தகைய ஏதேச்சாதிகாரப் போக்கு?

இப்பததிரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 15-4-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.